



# ஞானச்சுடர்

## மலர் 2005

### தை

ஓம்

முருகா

வெளியீடு


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ

## குறள் வழி

நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றல்
தேரினும் அ∴தே துணை

பொருள்:- நல்லவழியில் நின்று விரும்பி அன்புடைய செயல்களைச் செய்யப் பழகுக; பல வழியால் ஆராய்ந்து பார்த்தாலும் உயிர்க்குத் துணையாவது கருணையேயாகும்.






## நற்சிந்தனை

### குதம்பாய்- 4

ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச் சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ - குதம்பாய்
குருபரனை மறப்பேனோ

ஓங்கா ரத்தினுள்ளே ஒளிருஞ் சிவனடியை
நீங்கும் நெறியுண்டோ - குதம்பாய்
நீங்கும் நெறியுண்டோ

ஔவிய மில்லா வறிவுடைய பெரியோர்கள்
திவ்விய பார்வையாலே - குதம்பாய்
சென்மமெல்லாந் தீர்ந்ததடி.


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
(இரண்டாவது குருமஹா சந்நிதானம்)
அவர்கள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற "ஞானச்சுடர்" மலரானது ஏழு ஆண்டுகால அரிய சேவையினைப்பூர்த்தி செய்து எட்டாவது அகவையினில் காலடியெடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஏழு ஆண்டுகாலமாக சைவத்தமிழ் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றிய ஞானச்சுடரானது பல அரிய கட்டுரைகளையும் காலத்தின் தேவைக்கேற்ப நவீன யுகத்தின் பண்புகளுக்கு ஒத்தாற்போல் எளிய நடையில் அமைந்த ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்துள்ளமை கண்கூடு.

ஞானச்சுடரானது தன் சுடரொளியை இங்குமட்டுமல்லாது கடல் கடந்தும் ஒளிரச்செய்து உலகெங்கும் சைவத்தமிழொளிபரப்புவது அனைவராலும் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

இளைய தலைமுறை எழுத்தாளர்களினதும், அனுபவம் வாய்ந்த பல அறிஞர்களினதும் ஆக்கங்களை ஏற்ற இடம் கொடுத்து ஆவணமாக்கி வருகின்ற பணியினை செவ்வனே ஆற்றிவரும் பேரவையின்பணி போற்றுதற்குரியது. வாசிப்புக் கலையானது அரிகிவருகின்ற இக்காலப்பகுதியில் இவ்வாறான மலர்கள் வெளிவருதல் அவசியமாகும்.

இப்பணியினை சிறப்புற ஆற்றிவருகின்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்பணி மேலும் வளர்ச்சியடையவும் "ஞானச்சுடர்" இன்னும் பல்லாண்டு காலம் சுடர்மிகு ஆக்கங்களுடன் வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த*
*பரமாசார்ய ஸ்வாமிகள்.*

உ
சிவமயம்
ஞானபண்டித அமிர்தசுரபி
Dr. அருட்கவி சீ. விநாசித்தம்பி M.A.
(ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்)
அவர்கள் வழங்கிய

## வாழ்த்துப்பா

பொன்பெருகு தொண்டைமா னாற்றுச்சந் நிதிவேலன்
புனிதப்பணியாற்றுகின்ற
புனித புகழ் சந்நிதியான் ஆச்சிரமம் என்கின்ற
புண்ணிய செல்வமலையே
இன்பமிகும் அகவை ஏழாண்டுற்றாய் இன்று நீ
எட்டாண்டுக் கடியெடுத்தாய்
இமைப்பொழுதும் சலியாமல், கலையறிவு சமயநெறி
இயம்பிடும் மெய்யுணர்வு
அன்பாகப் பசிதீர்க்கும் ஆனந்தம்தருமமுதம்
அளிக்கின்ற பெரிய தொண்டு
வன்பவம் அறுக்கின்ற வழியாய மெஞ்ஞான
வழிகாட்டும் ஞானச்சுடரே
மயிலேறும் கந்தவேள் வாழ்காலம் பணியாற்றி
வாழி பல்லாண்டு வாழி

*அருட்கவி சீ. விநாசித்தம்பி*

### தவத்தால் சிவம்

சரியை கிரியை யோகங்களைச் செய்தல் மெய்த்தவமாகும். தவத்தைச் செய்வோரே சிவத்தைச் சார்வார். நித்த, அநித்த வேறுபாடுகளை உணர்ந்து அறஞ்செய்தல் வேண்டும். அறத்தால் அன்பு விளையும். அன்பினால் அருள் விளையும். அருளால் தவம் சித்திக்கும். தவத்தால் சிவமும் கைகூடும்.

உ

"சிவாகம சித்தாந்த ஞான தேசிக பானு"
"பிரதஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோன்மணி"

## சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர்

(சமாதான நீதிவான்)
அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்த சஞ்சிகையாக வெளிவரும் ஞானச்சுடர் தனது ஏழாவது அகவையைப் பூர்த்தி செய்து எட்டாவது அகவையில் வீறுநடை போட்டு காலடி வைப்பது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகும்.

வானில் தோன்றி பின்பு மறையும் நட்சத்திரங்களைப் போன்று தோன்றி உடன் மறைகின்ற சஞ்சிகைகள் போலன்று என்றும் சுடருடன் விளங்கும் ஞானச்சுடர் இன்னும் பல அகவைகளை காண எல்லாம் வல்ல வல்லை நகரின் காவல் தெய்வமான அன்னை பராசக்தியை வேண்டிப் பிரார்த்தித்து எனது உள்ளார்ந்த நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி அமைகிறேன்.

வாழ்க வளமுடன்

சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்.

## எட்டாவது ஆண்டில் காலடி பதிக்கும் ஞானச்சுடருக்கு எழுத்து கவிஞனின் இனிய வாழ்த்துக்கள்.

### ஞானச்சுடர் வாழ்க

எட்டாவது ஆண்டில் காலடி பதிக்கும் ஞானச்சுடரே!
இந்துக்களின் காவலனாய் எழுக ஞானச்சுடரே!
நாளை நமக்கொரு ஆன்மீக தீர்வுதர எழுக ஞானச்சுடரே
நயம் விளைத்து நம் மண்ணில் எழுக ஞானச்சுடரே!

### பண்பாட்டுப் பேரவையில் பணிகொள்வோர் வாழி

பண்பாட்டு பேரவையில் பணிகொள்வோர் வாழி
பாங்குடனே சந்நிதியான் அருள் பெற்று வாழி
கண்ணாக பேரவையை, ஞானச்சுடரை காத்து நீர் வாழி
காலத்தால் அழியாத வரலாற்றை சேர்த்து நீர் வாழி.

*-காரை. எம். பி. அருளானந்தன்-*

உ

# அருளொளி வீசும் அற்புதச் சுடரே வாழி வாழி.

அகவை ஈர்நான்கு ஆண்டதனில்க் காலடி எடுத்து வைத்து நடைபயில முனையும் அருள்ஞானச் சுடரே வாழி! வாழி! சைவம் உள்ளளவும் நிலைபெற்றுச் சுடர்விட்டு வாழ்கவே. நின்தன் சேவைதனைச் சொல்லவும் எழுத்தில் வடிக்கவும் எழுத்துக்கள் இல்லையே. சைவத்தையும் அதன் மேன்மையையும் சைவக் கலாச்சாரத்தையும் உலகெங்கும் அறியத்தரும் அற்புதம் தான் என்னே! செல்வச் சந்நிதிக் குமரனவன் அருட் பெருமைகளையும் அவனது பிரசாத வீபூதியையும் உலகம் முழுமைக்கும் எடுத்துச் செல்லும் செம்மையை என் சொல்வேன். சைவத்தமிழ் மாந்தர் மாநிலமெங்கும் சிதறுண்டு திக்கற்றவராய் வாழ்ந்தபோதும் சைவத்தமிழ்ப் பண்பாட்டை அவர்கட்கு ஞாபகமூட்ட அவர்தம் கரங்களில்த் தவழும் பெருமையை எப்படி எழுத்தில் வடிப்பேன்?.

சைவக் கலாச்சாரம் அழிவுபடாது, நிலைநிறுத்த, நவநாகரீக மோகத்தில்ச் சிக்கித் தடுமாறி நிற்கும் இளைய தலைமுறையினருக்கு, அவர்தம் உள்ளத்தில் ஊடுருவி, மனதில் பதியும் வண்ணம் சமயக்கருத்துக்களை எடுத்தியம்பி அவர்தமை நல்லாற்றுப்படுத்தும் நயத்தினை என் சொல்வேன்! வளரும் புதிய தலைமுறையினரை ஊக்குவித்தலும், தகவுடைச் சான்றோரைக் கௌரவிக்கும் வகையில் அவர்கட்கு முன்னுரிமையளித்து முதன்மைப்படுத்தலும் என்றும் இணையில்லாத் தொண்டல்லவா? அவற்றையும் செம்மையாச் செய்து நிற்கின்றனயே! இவற்றிற்கெல்லாம் முதன்மையாய் இருந்து ஊக்கமளிக்கும் தலைமைத்துவத்தையும் இங்கே உளமாரப் பாராட்ட வேண்டும். அதனிலும் மேலாக இவற்றையெல்லாம் வழிநடாத்தும் கந்தவேற் பெருமானின் கருணையையும் போற்றிப் பணிந்து, அருட்சுடரே என்றென்றும் இவ்வண்ணம் நீ ஒளிவிட்டுப் பிரகாசிக்க முன்னின்று காக்கும் முத்தமிழ்க் குமரன் திருப்பாதங்களை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழி வாழி வாழியவே!

*சிவானந்தவாநிதி*
*சிவத்திரு. வ. குமாரசாமிஜயர்*

உ

# சுடர் தரும் தகவல்

2004ஆம் ஆண்டு மார்கழிமாத ஞானச்சுடரிலேயே சுனாமி கடல் அலையின் தாக்கம் தொடர்பாக அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அனுதாபங்களையும் ஆத்ம சாந்தியையும் குறிப்பிட்டு ஆச்சிரமம் பாதிக்கப்பட்டவர்களுக்காக மேற் கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் வெளிப்படுத்தியிருந்தோம்.

தற்பொழுது ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில் சுனாமி தொடர்பான பல வகையான செய்திகள் பல கோணங்களில் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இதில் மீண்டும் இது போன்ற ஒரு இயற்கைச்சீற்றம் ஏற்படுவது தொடர்பான வதந்திகளும் செய்திகளும் வெளிவந்துகொண்டிருப்பதையும் நாம் பரவலாக அவதானிக்க முடிகிறது. புவியியல் தொடர்பாக கடந்தகால வரலாற்றை நோக்குமிடத்து இதுபோன்ற ஒரு இயற்கை அழிவு மீண்டும் இப்பகுதியில் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பது உணரப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாறான அனர்த்தங்கள் தொடர்பான ஆபத்தை உணரவும் அதனை முறைப்படுத்தி தெரியப்படுத்தி அழிவுகளைத் தடுக்கவும் அனைத்து மட்டத்தினரும் விழிப்புடன் இருப்பதால் இது தொடர்பாக மக்கள் கவலையடைவதும் வதந்திகளை நம்பி குழப்பமடைவதும் தேவையற்றவிடயமென்று உணருவதே பொருத்தமானது.

ஆனால் இந்த உலகில் தோன்றி மறைந்துகொண்டிருக்கின்ற மனிதர்கள் இயற்கைக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதையும் இயற்கைச் சக்தியுடன் போட்டிபோட முடியாதவர்கள் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக நடந்து முடிந்த கடல் அலையின் அனர்த்தத்தை எடுத்துக்கொள்வது பொருத்தமானது. இதனால் தான் கடலையும் நிலத்தையும் தெய்வங்களாக வணங்குகின்ற நம்பிக்கையை எமது சமயம் பின்பற்றி வருகிறது.

மேலும் மனிதர்கள் மனிதத்தன்மையிலிருந்தும் மனித நேயத்திலிருந்தும் மாற்றமடைந்து மிருகங்களுடன் கூட ஒப்பிட முடியாதவர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும், மனிதர்களே மனிதாபிமானமற்ற முறையில் மனிதர்களை அழிக்கும் நிலையில் இயற்கைக்கு மட்டும் சீற்றம் வரக்கூடாது என்று நினைப்பதும், இயற்கை மட்டும் மனிதனை அழிக்கக்கூடாதென்றும் எதிர்பார்ப்பது பொருத்தமானதா என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

ஆகவே முதலில் மனிதர்களாகிய நாம் மனிதாபிமானத்தைக் கற்றுக்கொண்டு மனித நேயத்தை வளர்த்து மனிதர்களாக வாழ்வதற்கு எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வோம். மனிதர்களே மனிதர்களை அழிக்கின்ற கொடூரமான மார்க்கத்தை கைவிடுவோம். அதன் பண்பு இயற்கை பற்றியும் இயற்கையின் அழிவிலிருந்து எம்மை காக்குமாறு இறைவனுடன் உரிமையுடன் மன்றாடுவோம்.

# ஞானச்சுடர்
# மார்கழிமாத வெளியீடு

மார்கழிமாத ஞானச்சுடருக்கான மதிப்புரையை திரு ஆ. சிறீஸ்கந்தமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள். இன்று சிலர் சமயத்தை தமது வாழ்க்கைக்கான ஒரு போர்வையாகவும் இன்னும் சிலர் சமயத்தை மதவெறியுடனும் பயன்படுத்தி வருவதை வாழ்க்கையில் பார்க்கின்றோம். இந்தநிலையில் வாழ்க்கையில் திருந்தி வாழ்வதற்கு உரிய மார்க்கங்களை காட்டும் ஒரு மலராக ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதை திரு ஆ. சிறீஸ்கந்தமூர்த்தி அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

நாம் எமது வாழ்க்கையில் சமயப்பணி, சமூகப்பணி மற்றும் கல்விப்பணிக்கு இயன்றளவு உதவவேண்டும். இவ்வாறான பணிகளை ஆச்சிரமமும் பேரவையும் மேற்கொண்டு வருவதை பாராட்டினார்கள்.

இன்று ஊடகத்துறையில் எவ்வளவோ வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன. இந்தவகையில் சஞ்சிகைகள் வெளியிடுவதிலும் இத்தகைய வசதிகள் வாய்பபுக்களைப் பயன்படுத்தினாலும் நிறைவான எழுத்துப்பிழைகளும் ஏற்படுகின்றன. ஆனால் ஞானச்சுடரில் இதுபோன்ற தவறுகள் எதுவும் இடம்பெறாது வெளிவந்து கொண்டிருப்பதை குறிப்பிட்டுக்காட்டினார்கள்.

எமது சமயம் தொடர்பான சடங்கு முறைகள் சமயம் தொடர்பான செயற்பாடுகள் எல்லாம் எமது அன்றாட வாழ்க்கையை நெறிப்படுத்துவது பற்றி குறிப்பிட்டு அவை தொடர்பான கட்டுரைகள் ஞானச்சுடரில் வெளிவந்துகொண்டிருப்பதை அடியார்களுக்கு வெளிப்படுத்தினார்கள்.

**நல்லோரை நாடு**

அறிவிலும் ஆற்றலிலுஞ் சிறந்த ஆன்றோர்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு. அதனால் உனது வாழ்வு உயர்ச்சியுறும். துன்பத்தில் அழுந்தமாட்டாய்.

கொடியானது உயர்ந்த மரத்தைப் பற்றிச் சுற்றிக் கொள்ளுமானால் வானம் வரை உயர்கிறது. இல்லையேல் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகிறது.

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் 85

2005 தை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பிள்ளையார் சுழி | சி.சி. வரதராசா J.P | 1 - 2 |
| குமரனிடம் அருள் பெற்ற... | செல்வி சி. சசீந்திரா | 3 - 5 |
| திருக்குறள் - திருவாசகம்... | டாக்டர். கஸ்தூரிராஜா | 6 - 8 |
| அகவை எட்டினிற்... | ஆ. கதிர்காமத்தம்பி | - 9 |
| எது அழகு | செல்வி லோஜி | 10 - 11 |
| சமய வாழ்வுக்கு கல்வி... | கனக நாகேஸ்வரன் எம்.ஏ | 12 - 15 |
| ஈழத்துச் சித்தர்கள்... | மூ. சிவலிங்கம் | 16 - 18 |
| சுவாமி மலையுறையும்... | தி. மயூரகிரிசர்மா | 19 - 21 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 22 - 24 |
| குழந்தைகட்கு இறைவன் நாமம்.. | ஆர்.வீ. கந்தசாமி J.P | 25 - 26 |
| அருணகிரிநாதர் அருளிய... | சி. வேலாயுதம் | 27 - 28 |
| பகுத்துண்ணல் | கு. சோமசுந்தரம் | 29 - 31 |
| சிவபக்தியில் சிறப்புப்.... | நா. நல்லதம்பி | 32 - 35 |
| சேவடி | சிவ. சண்முகவடிவேல் | 36 - 38 |
| மானுடத்தை மேன்மைப்...... | வ. குமாரசாமி ஐயர் | 39 - 42 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 43- 44 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 45 - 48 |
| ஆச்சிரமத்தினால் மேற்.... | | - 49 |
| நித்திய அன்னப்பணி | | 50 - 51 |
| வாசகர் போட்டி | | - 52 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ

# எட்டாவது வயதில்.......

எட்டாவது வயதில் காலடி பதிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்வதில் சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் பெருமகிழ்ச்சியடைகின்றது.

ஏழு வருடங்கள் கடந்த நிலையில் முத்திரைச்செலவு உட்பட எல்லா வகையான செலவுகளும் பல மடங்கு அதிகரித்த நிலையிலும் ஆரம்பத்தில் எம்மால் குறிப்பிடப்பட்ட அதே பெறுமதியில் இன்றும் ஞானச்சுடர் வாசகர் கைகளில் கிடைப்பதை அனைவரும் அறிவார்கள். விளம்பரங்கள் எதுவுமின்றி முற்றுமுழுதாக சமய சஞ்சிகையாக வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடரை இவ்வாறு உங்கள் கைகளில் அதே பெறுமதியுடன் கிடைக்கச் செய்வதன்மூலம் ஞானச்சுடர் சஞ்சிகையை ஒரு சமயப்பணியாக நினைத்து நாம் செயற்படுவதன் தாற்பரியத்தை வாசகர்கள் நன்கு விளங்கிக்கொள்ள முடியும். மேலும் தொடர்ந்தும் அதே பெறுமதியிலே தங்களுக்கு வழங்குவதற்கும் நாம் முடிவு செய்துள்ளோம்.

ஆனால் அதேநேரம் பல வாசகர்கள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதியைக் கருத்தில் கொள்ளாது நாம் செய்துகொண்டிருப்பது சமயப்பணி என்பதை தாமாகவே உணர்ந்து கொண்டவர்களாய் புத்தகத்தில் குறிப்பிட்ட பெறுமதியைவிட மிக உயர்வான அளவு பணத்தை உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தவகையில் உண்மையில் எம்மைவிட இவர்கள்தான் உயர்வான சமயப்பணியினை மேற்கொள்கின்றனர் என்பதை வெளிப்படுத்துவதில் நாம் நன்றியுடன் கூடிய மகிழ்ச்சியை அடைகின்றோம்.

ஞானச்சுடர் தொடர்ந்து வெளிவருவதற்கு கட்டுரைகளை வழங்கிக் கொண்டிருக்கும் சமயப் பெரியார்களையும் அறிஞர்பெருமக்களையும் அதேநேரம் ஞானச்சுடருக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கும் அன்பான வாசகர்களையும் நாம் நன்றியுடன் வாழ்த்துகின்றோம். இந்த இரண்டு பகுதியினரும் ஞானச்சுடரின் இரண்டு கண்களுக்கு ஒப்பிடக்கூடிய பெறுமதி வாய்ந்த அன்பு நெஞ்சங்கள் என்பதையும் நாம் உணருகிறோம்.

கட்டுரைகளை தெரிவுசெய்வது தொடக்கம் ஞானச்சுடர் வாசகர்களது கைகளுக்கு கிடைப்பது வரை அனைத்துச் செயற்பாடுகளிலும் தனது நேரடிக் கவனத்தையும் காத்திரமான பங்களிப்பையும் வழங்கிக்கொண்டிருக்கும் ஆச்சிரமத்தின் சுவாமிகளது பங்களிப்பையும் அச்சக அன்பர்களது கடினமான உழைப்பிற்கும் நாம் வார்த்தைகளால் நன்றி கூறிவிட முடியாது.

தோன்றாத்துணையாக இருந்து எம்மை எல்லாம் செயற்படுத்தும் சந்நிதியானின் திருவருள் எமக்கு தொடர்ந்தும் கிடைப்பதற்கு அவனது திருப்பாதங்களைப் பணிகின்றோம்.

பேரவையின் சார்பில் செயலாளர்

ந. அரியரத்தினம்

உ

# முன்னேற்றப்பாதைக்கு வித்திட்டவர்கள்

ஆச்சிரமம் ஆரம்பகாலந்தொட்டு இன்றுவரை செயலாற்றி வரும் பணிகளில் நித்திய அன்னதானப்பணி முதன்மையானது. இப்பணியினை முன் எடுத்துச் செல்வதற்கு ஆரம்பத்தில் இருந்த இடர்களோ பல. அப்படி இருந்தும் இப்பணியினைத் தொடர்ந்து செய்வதற்கு ஒருசில அன்பர்களின் உதவியை நாடவேண்டிய நிலையில், அவர்களும் மனம் கோணாத முறையில் ஆதரவு நல்கிய வகையில் இப்பணியை முன்னெடுத்தோம். ஆனால் இங்கே நடைபெறும் நித்திய அன்னப்பணியை அன்னதானக் கந்தனாகிய சந்நிதி வேலவனின் அருளின் மகத்துவத்தாலும், குருநாதராக விளங்கும் மயில்வாகன சுவாமிகளின் ஆசியினாலும் இப்பணி இன்றுவரை எவ்விதமான இடர்பாடுகள் இல்லாத வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் ஆதரவு நல்கும் அன்பர்களைத் தேடிச்சென்று பெற்றுக்கொண்டதைவிட இன்று எம்மை நாடிவந்து ஆதரவு தருபவர்களே அதிகம். அதிலும் குறிப்பாக தனது இறுதிக்காலத்தில் ஆச்சிரமத்தோடு இணைந்த முருகேசு சுவாமிகளின் பணியினையும் நாம் மறக்க முடியாது.

இந்தத்தூய பணியினை முதலாக வைத்து இன்று ஆச்சிரமத்தினால் ஆற்றப்படும் சகல பணிகளும் வளர்ந்துகொண்டே போவதை நாம் மட்டுமல்ல ஆச்சிரமத்தோடு ஈடுபாடு கொண்டவர்கள் அனைவரும் அறிவார்கள். அவ்வகையில் வடமராட்சிப் பகுதியிலுள்ள எழுபத்திமூன்று முன்பள்ளியில் கல்விகற்கும் சிறார்களுக்கான நாளாந்த சத்துணவு, ஆசிரியர்களுக்கான மாதாந்தவேதனம், நூற்றுக்கு மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு மாதாந்த நிவாரண உதவி, பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி, மாத உதவி வாரத்தில் மூன்று நாட்கள் வைத்திய சேவை எனப்பல பணிகளுக்கு வித்திட்டது இந்த நித்திய அன்னப்பணியேயாகும்.

அத்துடன் எமது பேரவையினால் வழமையான வாராந்த வெள்ளிநிகழ்வு உற்சவகால நிகழ்வு கந்தஷஷ்டி காலநிகழ்வு வைகாசிப்பெருவிழா, திருவாசக விழா போன்ற நிகழ்வுகளையும் ஒரு ஒழுங்கான அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதும் ஒரு சாதனையாகும்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று கடந்த ஏழுவருடங்களாக எமது பேரவையினால் வெளியிடப்படும் மலராகிய ஞானச்சுடர் பல அன்பர்கள் அறிவாளிகளின் சிந்தனைக் கருத்துக்களைத் தாங்கி எட்டாம் ஆண்டில் காலடி வைப்பதனையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

ஆச்சிரமத்தினால் நிறைவேற்றப்படும் சகல பணிகளும் ஆச்சிரமத்தைச் சார்ந்தோராலோ அல்லது பேரவையினராலோ செய்யப்படுவதில்லை. இதற்கெல்லாம் மூலகாரணமாக விளங்குவது, விளங்கிக் கொண்டிருப்பது சந்நிதியானும் இப்பணிகளுக்கு ஆதரவு நல்கும் அன்பர்களும்தான். இவ்வகையில் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு. தி. மகேஸ்வரனுக்கும் ஆச்சிரமத்தோடு ஈடுபாடு கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எட்டாம் ஆண்டில் எமது ஞானச்சுடர் மலர் காலடி வைக்கும் நேரத்தில் நன்றி கூறி எல்லாம் வல்ல சந்நிதியானின் அருள் பூரணமாக கிட்டவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சுபம் சாந்தி

குருபணியில்

செ. மோகனதாஸ்.

உ

# தைமாத சிறப்புப் பிரதிபெறுவோர் விபரம்

***திரு. கு. கங்கைவேணியன்***
(உரிமையாளர் வேணிகளஞ்சியம் யாழ்ப்பாணம்)

***திரு. ந. சத்தியரூபன்***
(ஸ்ரீ நதியா நகைமாடம் யாழ்ப்பாணம்)

***திரு. S. பத்மநாதன்***
(முகாமையாளர் மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

***திருமதி யோ. சிவப்பிரகாசம்***
(இளை. முகாமையாளர் மக்கள் வங்கி)

***திரு. வ. சண்முகநாதமுதலி***
(மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

***திருமதி விஜயகுமார்***
(மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

***திரு. T. சிவராஜ்***
(தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்)

***உரிமையாளர்***
(V.M.K நகை மாளிகை சாவகச்சேரி)

***உரிமையாளர்***
(சாரங்கா நகைமாடம் யாழ்ப்பாணம்)

***உரிமையாளர்***
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம் சங்கானை)

***உரிமையாளர்***
(கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் சங்கானை)

***திரு. இ. குமாரசாமி***
(சுவா்ணா வெதுப்பகம் K.K.S றோட் சுன்னாகம்)

***உரிமையாளர்***
(குபேரன் களஞ்சியம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்)

***உரிமையாளர்***
(லிங்கம் கிறீம் ஹவுஸ் யாழ்ப்பாணம்)

***உரிமையாளர்***
(வெங்கடேஸ்வரா யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(துர்க்கா மரக்காலை சண்டிலிப்பாய்)
**திரு. சி. தங்கவடிவேலு**
(சிற்றி வெதுப்பகம் தும்பளை)
**திரு. நா. குணரெட்ணம்**
(புதிய யாழ் வைத்தியசாலை ஆனைப்பந்தி)
**திரு. ஆ. சுந்தரலிங்கம்**
(பதவிநிலை உத்தியோகத்தர் அஞ்சல் திணைக்களம் யாழ்.)
**Dr. S. இராசலிங்கம்**
(தோப்பு அச்சுவேலி)
**லயன் K. செல்வரெத்தினம் J.P.**
(ஆஸ்பத்திரி வீதி அச்சுவேலி)
**திரு. நா. கந்தப்பு**
(தோப்பு அச்சுவேலி)
**திரு. அ. தவகுமார்**
(லண்டன்)
**திரு. க. தர்மலிங்கம் J.P.**
(நீர்வேலி)
**திரு. பொன். நேசதுரை**
(அரசடி வீதி சங்கானை)
**திரு. க. சோமசேகரம்**
(மகாராணி புடவை அகம் யாழ்ப்பாணம்)
**திரு. மு. தர்மலிங்கம்**
("சிங்காரராசா வாசா" உடுப்பிட்டி)
உரிமையாளர் **திரு. வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
(51, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(மாலயன் கபே யாழ்ப்பாணம்)
**திரு. S. ஞானரூபன்**
(அஜந்தாஸ் புடவை அகம் யாழ்ப்பாணம்)
**திரு. பா. இராசேந்திரம்**
(கிராம உத்தியோகத்தர் உடுப்பிட்டி)

**திரு. து. இராஜகோபால்**
(271, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

***திரு. செ. மதியாபரணம்***
(வளர்மதி புடவை அகம். கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்)
***திரு. இரா ஸ்ரீநடராசா***
(லிவ்கோ கல்வி மன்றம் உடுப்பிட்டி)
***திரு. நீ. சுப்பிரமணியம்***
(இளைப்பாறிய உத்தியோகத்தர் ப. நோ. கூ. ச. உடுப்பிட்டி)
***செல்வி தாட்சாயினி செல்வமாணிக்கம்***
(நாவலடி உடுப்பிட்டி.)
***திரு. K. சிவகுருநாதன்***
(பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்)
***திரு. ஜே. பிரபாகரன் மாஸ்டர்***
(சுப்பர்மாக்கற் நெல்லியடி கரவெட்டி)
***திரு. வே. இரத்தினசிங்கம்***
(சிவசக்தி மோட்டோர்ஸ் பருத்தித்துறை)
***திரு. சி. கணேசலிங்கம்***
(தமிழ்ப்பூங்கா நெல்லியடி)
***திரு. செ. கமலநாதன் (கமல்)***
(கணபதி களஞ்சியம் வலவந்தோட்டம், கரணவாய்)
***திரு. கி. அமிர்தலிங்கம்***
(மக்கள் வங்கி நெல்லியடி)
***உரிமையாளர்***
(பெசன் ஹவுஸ் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
***உரிமையாளர்***
(பெற்றா எசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
***திரு. குமாரலிங்கம் செல்வரஞ்சன்***
(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி தெற்கு)
***திரு. சிவஞானம் கிருபாகரன்***
(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி தெற்கு)
***திரு. நா. பொன்னம்பலம்***
(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)
***திரு. க. நாகராசா***
(பூம்பதி வீதி, வடலியடைப்பு)
***திரு. K. நடராசா***
(இளை. மின்பொறியியலாளர், பத்தமேனி)

**திரு. சு. கந்தையா** (பலாலி)

(சிவன் வீதி ஆவரங்கால்)

**கலாநிதி தி. கமலநாதன்**

(பீடாதிபதி யாழ். /கல்வியியற் கல்லூரி)

**திரு. ந. குலசேகரம்**

(இளை. பொலிஸ் உத்தியோகத்தர், வருணன்)

**திரு. மு. சரவணபவன்**

(கலைமகள் விலாஸ் சங்கானை)

**திரு. சி. இராசரெத்தினம்**

(பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகம் யாழ்ப்பாணம்)

**திருமதி. செ. உமாரதி**

(அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. செ. கோப்பாய்)

**திரு. சி. ஆறுமுகானந்தன்**

(கிளை. மேற்பார்வையாளர் உடு. ப. நோ. கூ. ச)

**திரு. க. கேதீஸ்வரன்**

(வர்த்தக வங்கி வவுனியா)

**திரு. க. பரணிதரன்**

(R. V. G மருந்தகம் யாழ்)

**திரு. இ. சிவஞானசுந்தரம்பிள்ளை**

(பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டி)

**திரு. தி. சிவகுமாரன்**

(பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி பிரதேச செயலகம் யாழ்)

**திரு. இ. யோகராசா**

(பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை)

**திரு. சோ. புவனராஜா**

(சங்கானை)

**திரு. ந. நாகேஸ்வரன்**

(முகாமையாளர் மக்கள் வங்கி யா/ பல். கழக கிளை)

**செல்வி. நா. யோகராணி J.P.**

(தேவாலய வீதி, சங்கானை)

**உரிமையாளர்**

(ரேவதி நகைமாளிகை யாழ்)

*உரிமையாளர்*
(உலக தொலைத்தொடர்பு நிலையம் திருநெல்வேலி)
*உரிமையாளர்*
(அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம் திருநெல்வேலி)
*நாதன் மெடிக்கல் சென்ரர்*
(நெல்லியடி)

# தமிழருக்கு தீர்வு கொண்டு தைமகள் வருகிறாள்

சுனாமியால் அழிந்தம்மா எம் உறவுகளிங்கு
சுந்தரத் தையவளே உனக்கோர் விண்ணப்பம்
வீணான தாமதங்கள் இனிவேண்டாம் தைமகளே
விடிவதனை விரைவினிலே தந்திடம்மா
நீதானே மூத்தவளாய் முதலவளாய் வருகின்றாய்
நின் அருளாசி எம் மக்களுக்கு வேண்டுமம்மா
மாதாவைப் பிதாவை மற்றும் உறவோரைப் பிரிந்தவரின்
மாளாத சோகமதை நீக்கிடவேண்டுமம்மா
பேதலித்து தடுமாறி அழிந்து ஒழியவா பிறந்தோமிங்கு
பேதமைகள் நீக்கி எல்லோரையும் ஒன்றாக்கு
ஆதனத்தை வழங்கி அன்னியத்தை அகற்றிவிடு
தென்புறத்தோர் அனைவருக்கும் தெரியப்படுத்து
தீர் வொன்றைக் காண தேதியை குறித்துவிடு
வந்து போவதை மட்டும் வழக்கப்படுத்தி விடாதே
வரலாறு உன்னை பழிகாறியாக்கி விடும்
நொந்து போய் இருக்கின்றோம் தாயே
நூதனமாய் எதையும் தவறாகப் பார்க்காமல்
தந்துவிடு ஈழத் தமிழருக் கோர் தீர்வதனை.

- மதுரகவி -

உ

## சக்தியும் சிவனும் இணைந்த வடிவம்

# பிள்ளையார் சுழி


சி. சி. வரதராசா J.P. அவர்கள்

தொடர்புக்கு ஒலி எத்துணை முக்கியமோ வரிவடிவங்களும் அத்துணை முக்கியமே. ஒலிகளில் அகரமும் உகரமும் சேர்ந்து ஓங்காரமாகி உயர்வுதரும் ஒலியாவதைப்போல் புள்ளியும் கோடும் சேர்ந்த வரிவடிவமே எழுத்துக்களின் அடிப்படையாகிறது.

இதனாலன்றோ எமது புனிதமான சைவசமய முறைப்படி நாம் எந்தக்காரியத்தை எழுதத் தொடங்கும் முன்பும் புள்ளியை முதலில் இட்டு அதனுடன் சேர்த்துக் கோடு நீட்டியே (உ) இது மாதிரியே எழுதத் தொடங்குவோம். இதுவே உண்மையான பிள்ளையார் சுழி. தொடக்க வரிவடிவம். பிள்ளையாருக்கு உரிய வரிவடிவம். பிள்ளையார் வடிவான வரிவடிவம்.

எனவேதான் நாம் எழுத ஆரம்பிக்கும்பொழுது பிள்ளையார் சுழி (உ) போட்டு "சுக்லாம் பரதரம்" எனக் குட்டிக்கொண்டே ஆரம்பிக் கின்றோம். புள்ளியும் கோடும் செம்மையாக எழுதத்தெரிந்தால் எல்லா எழுத்துக்களையும் முறையாக எழுதலாம்.

பிந்து புள்ளி வடிவம், இது சக்தி, நாதம் கோடு வடிவம், இது சிவம், சக்தியும் சிவனும் இணைந்த



வடிவமே பிள்ளையார் சுழி, இது மௌனக்குறி.

"அ" என்பது முதல் ஒலி, வாயைத்திறந்தவுடன் எழும் ஒலி, ஒலிகட்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் உள்ள ஒலி, அடிப்படையான ஒலி.

"உ" என்பது அடுத்த ஒலி, இ.்து உயிர் ஒலி. அகர ஒலியும் உகர ஒலியும் சேரும்பொழுது ஓகார ஒலி பிறக்கிறது. அ + உ = ஓ ஓகாரமும் 'ம்' ஒலியும் சேர்ந்ததே ஓங்கார ஒலி.

ஓங்காரம் இறைவனை உணர்த்தும் ஒலி. ஓம் என்ற சொல்

இறைவனை உணர்த்தும் சொல். ஓங்காரத்தை உச்சரித்தவர் உயர்வுறுவர். உயர்ந்த கதியை அடைவர். பேரின்பநிலை எய்துவர்.

இதேபோல புள்ளியும் கோடும் பிள்ளையார் சுழியாகி வழிபாட்டிற் குரிய வரிவடிவங்களாகின்றன. சைவ சமய மக்களை நல்வழிப்படுத்தும் சின்னங்களாகின்றன.

துன்பங்கள் வந்தபின்பு வழிபடுவதை விடத் துன்பங்கள் வரும்முன்பே நாம் உள்ளன்போடு பிள்ளையாரை வணங்கவேண்டும். நாம் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கி விட்டுத்தான் ஏனைய தெய்வத்தை வணங்கு வோம். விநாயகர் என்றாலே தனக்கு மேல் தலைவர் இல்லாதவர், அதாவது எல்லோருக்கும் தலைவர் என்று பொருள்.

விநாயகரை வணங்கினால் அவர் விக்கினங்களைத் தடுப்பார். வணங்காவிட்டால் விக்கினங்களைக் கொடுப்பார். இதில் அவர் பாரபட்சம் காட்டுவது கிடையாது.

திரிபுரத்தை எரிக்கச்சென்ற சிவன் விநாயகரை மறந்தார். அதனால் சிவனுடைய தேரின் அச்சு முறிந்தது. பின்பு அவர் விநாயகரை நினைத்த பிறகே தேர் சரியானது. அதே போன்று வள்ளியை மணம் புரியச்சென்ற முருகன் விநாயகரை மறந்தார். அதனால் அவரது நோக்கம் நிறைவேறவில்லை. முருகன் கணபதியை வேண்டிக்கொண்ட பிறகுதான் அவரது எண்ணம் நிறைவேறியது.

ஆதியும், அந்தமும் இல்லாத பாரம்பரிய சைவசமயத்தில் நாம் பிள்ளையாரை முதலில் வழிபட்டே எந்தச்செயலையும் தொடங்க வேண்டும்.

நாம் எதை எழுதத்தொடங்கும் முன் விநாயகரை நினைத்து "பிள்ளையார் சுழி" போட்டு எழுதத் தொடங்கும் விடயங்கள் நல்லனவாக அமையும் என்ற நம்பிக்கையுடன் அடியேனும் எமது முதல் ஆக்கமாக கொழும்புத்துறை உப்புக்குளம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகப் பெருமான் எமது குலதெய்வம் "விநாயகரை" "எண்ணியமுடிதல் வேண்டும்" என உள்ளன்போடு வணங்கி "பிள்ளையார் சுழி" எனும் விடயத்தை இறை அனுக்கிரகத்துடன் எழுதியுள்ளேன். விநாயகர் துணைபுரிவார். "கருணை நிறைந்த இதயம் கடவுளின் ஆலயம்".

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை -

-கபிலதேவநாயனார்-

உ

# குமரனிடம் அருள்பெற்ற குமரகுருபரர்

செல்வி சசீந்திரா. சிவராஜசர்மா அவர்கள்

இயற்கையின் இனிய நாதமாய் இறையருள் பரந்துள்ள இப்புவிதனில் இறையருளை உணர சிறுவயதுமுதல் இறைபக்தி, இறைநம்பிக்கை ஆகியவற்றை வளர்த்தல் அவசியம். சிறுவயதில் இறையருள் பெற்ற சிறுவர்களில் குமரகுருபரரும் ஒருவர்.

நெல்லைச்சீமையில் ஸ்ரீ வைகுண்டம் என்ற ஊரில் சில நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்தவர் குமரகுருபரர். அவர் ஐந்து வயதுவரை பேசவில்லை. அதனால் திருச்செந்தூர் செந்திலாண்டவர் கோவிலில் அவரது பெற்றோர் 48 நாட்கள் விரதம் இருந்தனர். ஒருநாள் இரவு கனவில் குமரப்பெருமான் தோன்றி குழந்தையின் நாக்கின்மீது வேலினால் ஷடாட்சரத்தை எழுதினார். குழந்தை தன் தாய், தந்தையரை அழைத்து முருகனின் அருளைக் கூறியது. தாய், தந்தையர் வியந்து முருகனின் அருளைப்போற்றித் துதித்தனர். அன்றிலிருந்து குமரகுருபரர் "பூமேவு" என்று தொடங்கி 244 அடிகள் கொண்ட 122 கண்ணிகளில் கலிவெண்பா பாடினார்.

மதுரைமன்னன் திருமலை நாயக்கரின் கனவில் மீனாட்சிஅம்மன் தோன்றி மன்னா, செல்வன் குமரகுருபரன் எம்மைப்பற்றிப் "பிள்ளைத்தமிழ்" பாடியிருக்கின்றான். திருப்பரங்குன்றத்தில் இருக்கும் அவனை இங்கு அழைத்துவந்து எம் ஆலயத்தில் அந்த நூலை அரங்கேற்று என்றுகூறி மறைந்தாள். மன்னர் மிகவும் மகிழ்ந்து திருப்பரங்குன்றம் கோவிலுக்குச் சென்றார். அங்கு குமரகுருபரனைக் கண்டு சுவாமி, தாங்கள் அங்கயற் கண்ணியின் திருவருள் பெற்றவர். தங்களை மதுரைக்கு அழைத்து வருமாறு அம்மை பணித்துள்ளாள். எழுந்தருள வேண்டும் என வேண்டினார். எல்லாம் இறைவனின் விருப்பம் எனக்கூறி மன்னருடன் சென்றார். மன்னர், குமரகுருபரரையும் அவரது நூலையும் யானைமேல் ஏற்றி மதுரை நகரை வலம் வந்தார். பின்னர் கோவிலில் நூலை அரங்கேற்றினார். அப்போது மீனாட்சிஅம்மை ஒரு சிறுமியாகவந்து மன்னரின் அருகில் அமர்ந்தாள். குமரகுருபரரின் பாடல் களைக்கேட்டு ரசித்துத் தம் கழுத்திலிருந்த மணிமாலையை அவருக்கு அணிவித்து மறைந்தாள். வந்த சிறுமி மீனாட்சிதேவி என்பதை அறிந்த குமரகுருபரர் வியந்து தாயே மீனாட்சி, தாங்களே இந்த எளியவனின் பாடலைக்கேட்க வந்தீர்களோ! என்னே தங்கள் கருணை! எனப்போற்றினார்.

பின் ஒருநாள் குமரகுருபரர் கோயிலில் தேவாதிதேவா, அடியேனுக்கு ஒரு ஞானாசிரியரைக் காட்டியருளவேண்டுமென வேண்டினார்.

அப்போது இறைவன் வாக்கு ஒலித்தது. "நீ வடதிசை நோக்கிப் பயணம் செய்யும்போது யாரிடம் உன் வாக்கு தடைப்படுகிறதோ அவரே உன் குரு" என ஒலித்து நின்றது.

தருமபுர ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகர் கேட்ட பெரிய புராணத்து "ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள" என்ற விருத்தத்தை குமரகுருபரர் விளக்கும்போது அவரது வாக்குத் தடைப்பட்டது. அதனால் அவர் மாசிலாமணிதேசிகரிடமே ஞான தீட்சை பெற்றார். குருவின் ஆணைப்படி குமரகுருபரர் பல சிவத்தலங்களுக்குச்சென்று ஈசனின் பெருமைகளைப் பாடிமகிழ்ந்தார். பிறரையும் மகிழ்வித்தார். ஒருநாள் குமரகுருபரர் கனவில் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தோன்றித் தம்மைப் பாடுமாறு பணித்தார். அவரது அருளால் "முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்" என்ற காவியத்தை இயற்றினார்.

இவ்வாறு பல தலங்களுக்குச் சென்ற பிறகு மீண்டும் அவர் தமது குருநாதரிடம் சென்றார். குருநாதா, தங்கள் அருளால் பல தலங்களையும் தரிசித்து பாமாலைகள் பாடினேன். இப்போது "பண்டாரமும் மணிக்கோவை" என்ற தங்கள் புகழ்பாடும் நூலை இயற்றி உள்ளேன். ஏற்றருளவேண்டும் சுவாமி என வேண்டினார். குருவும் "செந்திலாண்டவன் திருவருளே உனது பாடல்களாக வெளி வருகின்றன. மகனே, நீ காசி சென்று அங்கே சைவம் தழைக்கப்பாடுபடு" என்றார். குமரகுருபரரும் தங்கள் சித்தம் சுவாமி என்றார். காசியில் அப்போதைய அரசன் ஒரு சுல்தான். அவன் குமரகுருபரரின் பெருமையை அறியாதவன். அவனைக்காண விழைந்த குமரகுருபரரை அலட்சியப்படுத்தினான். யார் அந்த சாமியார்? அவர் என்ன சிங்கத்திலா வருகிறார்? அவரையெல்லாம் நான் சந்திக்கமுடியாது. நான் பேசும் மொழிகூட அவருக்குத் தெரியாதே என்று கேலி செய்தார். அதைக் கேள்விப்பட்ட குமரகுருபரர் சரஸ்வதி தேவியைத் துதித்தார். சரஸ்வதிதேவி காட்சி அளித்தாள். தேவியின் அருளால் "சகலகலாவல்லி மாலை"யை அப்போது இயற்றினார். பின்னர் சரஸ்வதிதேவியிடம் தாயே! என் குருவின் கட்டளையை நிறைவேற்றத் தாங்கள் அருளவேண்டும் என வேண்டினார். தாயும் மகிழ்ந்து மக்கள் கல்வி அறிவும் ஞானமும்பெற உனது இந்தப் பாடல்கள் வழிவகுக்கும் என அருளினார். சரஸ்வதியின் அருளால் இந்தி மொழியும் அறிந்த குமரகுருபரர், தம் சக்தியால் ஒரு சிங்கத்தின்மீது அமர்ந்து சுல்தானிடம் சென்றார். அதனைக்கண்டு பயந்த சுல்தான் சுவாமி, அறியாமையால் தங்களை அலட்சியம் செய்துவிட்டேன். தங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டான். குமரகுருபரரும் மன்னா, தருமை

ஆதீனத்திற்காக காசியில் ஒரு மடம் அமைத்து சைவம்பரவ வேண்டிய வற்றைச்செய்து தரவேண்டும். எனக்கேட்டார். அப்படியே ஆகட்டும் என்று கூறி சுல்தான் எல்லா ஒழுங்குகளையும் செய்தான். இவ்வாறாக பல மடங்களை நிறுவிய குமரகுருபரர் கடைசியில் ஸ்ரீ காசி விஸ்வநாதரின் திருவடியை அடைந்தார். எனவே சிறுபிள்ளைப் பிராயத்திலேயே இறைபக்தியை வளர்க்கவேண்டும். குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லிமாலை பாடல்களை தினமும் பாடும் மக்கள் கல்வி அறிவும் ஞானமும்பெற்று சரஸ்வதிதேவியின் திருவருளும் குருஅருளும் கிடைக்கப்பெறுவார்கள்.

## எட்டாண்டும் நயந்துவர வேண்டினோம்.

முதுபெரும்புலவர் கலாபூஷணம் **வை. க. சிற்றம்பலம்.**

உலகுயிர்க ளுய்யவே
உயர் செல்வச் சந்நிதியில்
ஒப்பில்வே லாகிநிற்பாய்
உத்தமனே யவ்வேலை
நீயெனவே போற்றியாம்
ஓயாது வணங்கிநிற்போம்
அலகில்புக ழுங்வேலே
யருள்ஞானச் சுடரென்றிங்
ஆச்சிரமத் தன்பர் போற்றி
அழகான சஞ்சிகையாய்
திங்களொரு மலராக
ஆண்டுதொறும் வெளியிடுவரால்

பலர்புகழும் அம்மலகம்
பண்பாளர் ஆசிரியர்
பலவுரைகள் சுமந்துசென்றே
பார்தோறும் தவறாமல்
இதுகாறும் ஏழாண்டு
பரிந்துநடந் துலவச்செய்தாய்
நலமுடனே யவ்வாறு
நடந்துவரும் எட்டாண்டும்
நயந்துவர உனைவேண்டினோம்
நல்லாற்றங் கரையோரம்
கோயில்கொண் டருள்புசியும்
நாதசந் நிதிமுருகனே.

நல்ல வேலை ஒருபோதும் வீண் போவதில்லை.

உ

# திருக்குறள் – திருவாசகம்: ஒரு பார்வை

டாக்டர் கஸ்தூரிராஜா அவர்கள்
(அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரி - தமிழ்நாடு)

உலகம் தோன்றிய நாள்முதல் உலக உயிர்கள் அனைத்தும் நம்மிலும் மீறிய சக்தி ஒன்று உண்டு என்பதை உணர்ந்தே வாழ்கின்றன. அதனால் விளைந்த விளைவே சமயம் எனலாம். உலக மக்களை நெறிப்படுத்திச் சீரிய வழியில் நடக்க உதவிய சிந்தனைக்கருவூலங்கள் திருக்குறளும் திருவாசகமும் எனில் மிகையாகாது.

**திருவள்ளுவர் (திருக்குறள்)**

"தெளிந்த வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ கி.மு 1முதல் 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்." என்ற (டாக்டர் மா. இராச மாணிக்கனார் கால ஆராய்ச்சிக் கருத்தின்படி) திருக்குறள் சங்கமருவியகாலநூல் எனலாம். (பக்கம் 32)

**மாணிக்கவாசகர் (திருவாசகம்)**

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற நூலை எழுதிய மாணிக்கவாசகரின் காலம் "ஒன்பதாம் நூற்றாண்டு" என்கிறார் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள். (தமிழ் இலக்கியவரலாறு பக் 118)

எவ்வூரில், எக்காலத்திற் பிறப்பினும் சான்றோர் சிந்தனை ஒத்திருக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். எனவே, இரு மறைகளும் அழியாச்சிறப்புடையன என்பதில் மாற்றுக்கருத்து இல்லையெனலாம்.

**இரு நூல்களின் சிறப்பு:-**

திருவள்ளுவர் எழுதிய திருக்குறளைப் படிப்பவர், அவர் கூறியுள்ள கருத்துக்களை எண்ணியெண்ணி வியந்தே பேசுவர். ஒரு சராசரி மனிதனால் இவ்வளவு செய்திகளைக் கூறமுடியுமா எனில் அதுவும் வியப்பே. முப்பாலில் எப்பாலைத்தொட்டாலும் அப்பாலின் சுவை தனிச்சுவையே. எடுத்துக்காட்டாகக் காமத்துப்பாலைக் காட்டலாம். தலைவன் தலைவி - இருவரின் காதல், அவர்கள் பெறும் இன்பம், ஊடல் ஆகியவற்றை விளக்கியுள்ள விதம் ஒவ்வொருவரினதும் வாழ்வின் அகத்தைப் படம்பிடித்துக்காட்டும் கண்ணாடியெனலாம். அதனால் தான் அதன் சிறப்பை மாமூலனார் அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்.

"அறம், பொருள், இன்பம், வீடு என்னும் அந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்".

வியர்வைவர வேலை செய்தால் விரும்பியதெல்லாம் உண்ணலாம்.

**திருவாசகம்**

"மனித வடிவில் வந்த இறைவன், மாணிக்கவாசகர் சொல்லச் சொல்லத் தாமே முற்றும் எழுதிக்கொண்டதோடு அதன் முடிவில் அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியது என்று தமது கையெழுத்தும் இட்டு அத்திருமுறை ஏட்டினை தில்லைச்சிற்றம்பலத்தின் வாயிற்படியில் வைத்தருளினர்". கடவுள் மாமுனிவர் எழுதிய திருவாதவூரர் புராணத்தில் இடம்பெற்றுள்ள இச்செய்தி திருவாசகத்தின் தெய்வத்தன்மையைக் காட்டுவதாகும்.

"கடையூழி வரும் தனிமை கழிக்க வன்றே அம்பலத்தில்
உடையார் உன் வாசகத்தில் ஒரு பிரதி கருதியதே"

என்று மனோன்மணிய அடிகளும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். தமிழிற் சிறந்த நூல்கள், ஆறு என உமாபதிசிவம் அவர்கள் கீழ்வரும் பாடலின் மூலம் விளக்குகிறார்.

வள்ளுவர் சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓர் ஆறும்
தண்டமிழின் மேலாம் தரம்.

என்ற பாடலின் மூலம் திருக்குறள், திருவாசகம் இரண்டின் மேன்மையையும் உணரமுடிகிறது.

திருக்குறள் பொதுமறை எனில், திருவாசகம் சைவமறை என்று சான்றோர் புகல்வர், இதனை

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரைஎனும் ஆரணமொழியோ!
ஆதிசீர் பரவும் வாதவூரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனே

என்ற பாடலின் மூலம் சிவப்பிரகாச சுவாமிகளின் உணர்வினை உணரமுடிகிறது.

திருக்குறளைக் கற்க வாழ்வு சிறக்கும். வீடுபேறு கிட்டும். திருவாசகம் ஓத வினைகள் நீங்கி வீடுபேறு பெற இயலும். இந்த இரு நூல்களைக் கற்பதால்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்ற குறட்பாவிக்கேற்ப மனிதன் தெய்வமாக இயலும்.

**நூல் - பயன்**

முப்பாலை ஆழ்ந்து படிக்க வாழ்வியல் இன்பத்தைத் துய்க்க இயலும்.

திருவாசகத்தைப் படிக்க,

"திருவாசகம் இங்கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பராகு நரரன்றி
மன்பதை உலகில் மற்றையோ ரிலரே."

உள்ளம் அடையும் மாற்றத்தை நால்வர் நான்மணிமாலை தெளிவாகக் காட்டுவதை உணரலாம்.

மறைகளாம் இந்நூல்களால் உணர்த்தப்படும் செய்திகளை ஒப்புநோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இரு நூல்களும் கடல் போன்ற பரப்பினையுடையவை. எனவே, திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்திற் கூறியுள்ள கருத்துக்கள் திருவாசகத்தில் உள்ள கருத்துக்களோடு ஒப்ப நோக்குவதே இக்கட்டுரையின் பொருளாகும்.

கடவுள் வாழ்த்து:-

இரு நூல்களும் பக்திநெறியை வலியுறுத்தினாலும், திருக்குறள் கடவுள் வாழ்த்தில் இந்தக் கடவுள் என்ற பெயர் சுட்டாது பொதுவாகவே கூறுகிறது. ஆனால் 'திருவாசகம்' சைவ நெறியைக் கூறுகிறது.

'வாலறிவான் நற்றாள் தொழுவதும், எண் குணத்தால் தாள் வணங்குவதும்', 'இறைவனடி சேர்தலும்' - இறைவனின் புகழினைப் பாடுவதும்'

என்று திருக்குறள் பக்திநெறியைக் குறிப்பாகச் சுட்டுகிறது. 'தவம்' என்ற அதிகாரத்தில்,

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" (265)

என்று கூறுவதால் தவநெறியும் முக்திக்கு வழிகாட்டும் என்பதனை உணரலாம்.

திருவாசகத்தில், உலக மக்களை உய்விக்கப்பயன்படும் நெறியாக முக்தி நெறியையும் அதற்கு வாய்க்காலாக பக்தி நெறியையும் அச்சோப் பதிகத்தின் முதற்பாட்டிற் கீழ்வருமாறு பாடுகிறார்.

"முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

என்ற பாடலிலிருந்து மும்மலம் அறுவித்து இறையருள் பெறுவதே பிறவிப்பயன் என்பதனை உணரமுடிகிறது.

(தொடரும்..

வேடிக்கைப் பேச்சில் வெளிவரும் உண்மை பல.

உ

# அகவை எட்டினிற் காலடி வைக்கும் ஞானச்சுடருக்கு வாழ்த்து

சிவகவிமாமணி கவிஞர். ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள்

ஞானச் சுடரே! ஞானச் சுடரே!
ஞானம் பரப்பி ஞாலம் எங்கும்
வானம் ஒளிரும் வளர்ம திபோல
ஞான ஒளியாய் நலமே வாழி.
தொண்ணூற் றெட்டிற் தொண்டைமா னாற்றில்
சந்நிதி வேலன் தண்ணளி வழங்க
மன்னும் பேரவை மோகனும் பேண
வண்ண மலராய் உதித்தோய்! வாழி
அயலவர் அச்சில் அச்சிட உதித்து
உயர்வாம் ஞான உரைகளாற் தவழ்ந்து
நலமாய் அறிஞர் நாடிட நடந்து
சுயமாய் அச்சகம் தொடக்கினோய்! வாழி
முந்நூறு பிரதி முதன்மலர் உடனுதித்தே
ஐந்நூறு சேரும் ஆயிரங் கடந்திடச்செய்
பொன்மலராய்ச் சமய மாண்புகள் பலவிளக்கி
பன்னரும்ஞா னவுரை பரப்புவோய்! நீடுவாழி
ஆண்டு ஏழினில் அந்தணரின் மாற்றம்போல்
மாண்பு மிகுந்திடும் மங்கலமாந் தோற்றமுடன்
ஆன்ற அறிஞரும் ஆர்வமாக ஏந்திடவே
யாண்டும் அறிவொளி பரப்பும் நீ! நீடுவாழி.
எட்டு வயதடை எழில்ஞானச் சுடரே நீ!
அட்ட மூர்த்தியின் அறுமுகனின் நெறிமுறைகள்
எட்டுத் திக்கிலும் ஏற்கும்வ கைபுகட்டும்
இட்ட முடையஞா னதீபமாக நீடுவாழி.
முருகன் அருளால் மிளிரும் ஞானச் சுடரை வழிநடத்தும்
அருளார் பணிகள் ஆற்றி மகிழ்பே ரவையும் நீடுவாழ்க
மருவும் அடியார் வயிற்றுப் பசியும் அறிவுப் பசியுமுடன்
வருந்த முந்நீர்க் கமுயல் மோகன தாசும் நீடுவாழ்க.

உ

# எது அழகு (ஒருநிமிடம் சிந்தியுங்கள்)

செல்வி லோஜி அவர்கள்

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல. நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு.

மனிதன் தோன்றிய காலம் தொடக்கம் ஏதோ ஒரு வகையில் அறிவு வளர்ந்துகொண்டே இருக்கின்றது என விஞ்ஞான அனுபவம் கூறுகின்றது. மனித வளர்ச்சிக்குக் கல்வியால் வளரும் அறிவுவிருத்தி மிக முக்கியமானது. மனிதன் மனிதனாக வாழ வேண்டுமாயின் கல்வி வளர்ச்சி மிக முக்கிய பங்கு வகிக்கவேண்டும். விஞ்ஞானம் மட்டுமல்ல மெய்ஞானமும் வளரக் கல்வி அவசியமானது. இருபதாம் நூற்றாண்டிலும் கல்வி வளர்ச்சி பெறுவதாகக் கூறமுடியவில்லை. உலகில் உள்ள மக்கள் தொகையில் குறைந்த அளவு மக்களே கல்வியையும் அறிவையும் பெற்றிருக்கின்றனர். கல்வி அறிவு வளர்வதனால் மத வளர்ச்சி விருத்தி ஆகும். இவ்வுலகின் எழுகின்ற பிரச்சினைகளுக்குக் கல்வி அறிவு இன்மையே காரணமாகும். மனிதநேயம் இல்லாத அறிவினால் இவ்வுலகத்தில் மனிதனிடம் பொறாமை, அழுக்காறு, வஞ்சம், சூது என்பன எழுகின்றன.

ஒருவன் தன் வாழ்வில் வளர்ச்சி அடைந்துவிட்டால் அவனை எப்படி முறியடித்துக் கீழ் நிலைக்குத் தள்ள முடியும் என எதிர் பார்க்கின்றனர். மனிதனிடத்தே மனிதநேயம் மலரவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. தற்காலத்தில் மனிதன் நாகரிகமாக வாழ்கின்றான் என்று நம்புகின்றனர். ஆனால் கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த உளத்தூய்மை குன்றிப்போய் இருப்பதனை யாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதனிடம் சில நல்ல பழக்க வழக்கம் இடையில் ஏற்படுத்தக் கூடியன அல்ல. ஒருவனுடைய பிறப்பிலே இருந்து அது வளர வேண்டும். இன்று யாழ்ப்பாணத்தில் நாகரிகம் எது என்று கேட்டால் நாலு சொல் பயமின்றிப் பேசுவதற்குக் கற்றுக் கொள்வதற்கு என்றும் உடை தூய்மையாக இருக்க வேண்டும் என்றும். ஒருவர் பிரயாணம் செய்ய ஒரு வாகனம் இருந்தால் இதுமட்டும் நாகரிகம் என்றும் எண்ணுகின்றனர்.

மனிதம் இன்னும் வளரவில்லை. எத்தனை சந்தர்ப்பங்களிலும் நான் முந்தி நீ முந்தி என்று எண்ணுகின்றனரே தவிர எதற்கும்

முந்தலாம் எதற்கும் பிந்தலாம் என்ற எண்ணம் வளரவில்லை. சைவக் கோயில்களில் அர்ச்சனை செய்வதற்கு வரிசையில் நிற்கும் அன்பர்களைப்பற்றிச் சிந்தியாது பின்வரிசையில் வரும் இறை அன்பர்கள் முண்டியடித்து நெரிந்து தள்ளிவிட்டுத் தாம் அர்ச்சனைப் பொருட்களுடன் சென்று முந்தித் திரும்பிவிட்டனர் என எண்ணுவதைக் காணக்கூடியதாக இருப்பது எமது சைவசமயிகட்கு ஓர் வேதனைதரும் செயலாக காணப்படுகின்றது. இன்னும் திருநீறு தீர்த்தம் சந்தனம் பெறும் அன்பர் கூட்டத்தினருக்கும் இவ்விடயத்திற் கூட ஒற்றுமை என்பது எட்டப்படவில்லை. புனித மாகத் திருநீற்றைப் பெற்று அதனைப் பூசுவர். ஏனைய அன்பர்களுக்கு இடவசதி செய்து கொள்ளாமல் அவ்விடத்தில் நிற்பது என்பது கவலைக்குரிய விடயமாகும். ஒரே நேரத்தில் எத்தனை அன்பர்கள் இறைவன் காட்சி காணமுடியும். ஏனையவர்களுக்கும் இடம் கொடுத்துச் செல்வதுதான் அறிவாகும். பகுத்தறிவுள்ள மிருகம் மனிதன் என்று சொல்லக் கேட்கின்றோம். ஆனால் அந்த வகையில் தொடர்வது எமக்குக் கைவரவில்லை. இது எமது அறிவு வளர்ச்சி இன்றியமைய எடுத்துக்காட்டுகின்றது.

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தும் மனிதன் மட்டும் அறிவு பெறுவதில் ஊக்கம் காட்டாது வாழ்தல் மனித இனத்துக்கு வெட்கக் கேடான விடயம். அறிவு என்பதைப் படித்துப்பெறாவிட்டால் அனுபவ மூலமாக ஓரளவுதான் பெறமுடியும். எனவே நாம் நாகரிகம் பெற்ற மக்கள் என்று சொல்வதற்குக் கல்வி மிக முக்கியமானது. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்".

என்ற வள்ளுவர் வாக்கினைக் கைக்கொள்வோமாக! இவை எமது சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதுவே உலக அழகில் முதல் இடத்தைப் பெறுகின்றது. பேராசிரியர் 'திரு' என்பது "கண்டோரால் விரும்பப்படும் தன்மை" என்றார்.

## துறவு

நம்முடைய பழைய தரும நூல்களில் பெண்களுக்கு சந்யாசம் விதிக்க வில்லை. மனைவி சற்று ஏறுமாறாக இருந்தால் கூறாமல் சந்யாசங்கொள் என்று ஆணுக்கு விதித்திருக்கின்றது. சந்யாசம் ஒரு கடின வழி. அந்தக் கடின வழியை மென்மையான பெண்மை தாங்குவது துன்பம்

அன்றியும் சந்யாசம் என்றால் எல்லாவற்றையும் நன்றாக விடுவது என்பது பொருள். பிறந்த ஊர், உறவினர், வீடு, நண்பர் அனைவரையும் விட்டு நாதனை நாடிச்செல்வதே சந்யாசம். ஒரு பெண்ணும் திருமணம் ஆனவுடன் ஊர், வீடு, சுற்றம், நண்பர் அனைவரையும் விடுத்து நாதனுடன் செல்கின்றாள். அதுவே அவளுக்குச் சந்யாசம்.

உ

# சமயவாழ்வுக்குக் கல்வி அவசியம்

கனகசபாபதி நாகேஸ்வரன் எம்.ஏ. அவர்கள்

கல்வி வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை என்பது அறிஞர்தம் கருத்தாகும். ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவது கல்வி. அதனால் கல்வியானது ஆதிகாலந்தொட்டு இன்றுவரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறது. ஒருவனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலைத்தோண்டி வெளிக்கொணர்வதே கல்வியின் இலக்காக அமைதல் வேண்டும். கல்விப்பயன் உள்ளொளியை வெளிக்கொணர்வதாகும். "கல்வி" என்பது 'வளர்த்தல்' என்னும் பொருளையுடையது என்பர். கல்வியினூடகப் பல்வேறுவகைப்பட்ட அறிவுத்துறைகளும், ஆற்றல்களும் வளர்கின்றன. ஆகவே கல்வி அறிவை வளர்த்தலால், அது 'வளர்த்தல்' என்னும் பொருளையேயுடையது என்பதுதான் பொருந்தும் என்று கூறுகிறார் "ஆடம்ஸ்" என்னும் கல்விச்சிந்தனையாளர்.

ஒருவன் பெறும் பல்வகைப்பட்ட அனுபவங்களே கல்வியாகும். அனுபவங்களினூடாகவே ஒருவன் அறிவைப் பெறுகிறான். கல்விச் சிந்தனையாளர் "ஜோன்டுயி" என்பார், "கல்வி என்பது அனுபவங்களை அனுபவங்களால், அனுபவங்களினூடாக அளிப்பதாக அமைய வேண்டும் என்று கூறுகின்றார். பேர்ட்ரன்ட்ரஸல் "வாழ்க்கை அமைப்பிற்கும் இயல்பான சூழ்நிலைக்கும் இடையிலான சமமான அநுபவமே கல்வி" என்கிறார்.. அதாவது சூழலுக்கேற்ற வகையில் பொருந்தி வாழக்கற்றுக்கொள்வதே கல்வியாகும். "மனிதருக்குள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி" என்பார் சுவாமி விவேகானந்தர். மகாத்மா

"கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழுமனிதனை வெளிக்கொணர்வது: முழுமனிதனை உருவாக்குவது: அவனுடைய ஆளுமை வளர்ப்பது: எனவே மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா, இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையை அடையச்செய்வதே கல்வியின் பயனாகும்" என்று

ஆங்கிலக் கவிஞனான வில்லியம் வோர்ட்ஸ்வேர்த், "மனிதத் தன்மையினை மனிதர் பெறப் பயிற்சி அளிப்பதே கல்வி" என்கிறார்.மனிதத் தன்மையாவது அறவழி நடத்தலாகும். வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், "சுதந்திரமான சிந்தனையும் கலையை உணரும் அழகுணர்ச்சியும் இரக்க சிந்தனையும் படைப்பாற்றலும் ஒருவனிடத்தில் வளரத் துணைபுரிவதே கல்வி"

கல்வி என்பது ஓர் ஆய்வு என்ற முடிவுக்கு வரலாம்போல் தோன்றுகின்றது. ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ளத் துணை நிற்பது கல்வி. தான் வாழும் சூழலையும் சமூகத்தையும் அதன் பாரம் பரியத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் ஆராய்ந்துணரவும் அவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் கல்வி பயன்படுகிறது. சுருங்கக் கூறுவதானால் சமுதாயம் காண விழைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும். கல்வியின் நோக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

மாணவனுடைய அறிவை விருத்தி செய்து, அதனூடாக அறியாமையாகிய இருளை அகற்றுதல். பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணுதற்கு வழிவகுத்தல் உயர்நாடி. பண்பாடு இல்லாத நாடு முதுகெலும்பு இல்லாத உடல்போன்றது. கல்வி, பண்பாடாகிய செல்வத்தைப் பேணிக் காப்பாற்றுதல் வேண்டும்.

அறவழி நின்று ஒழுக்கத்தையும் ஒப்புரவையும் பேணுவதற்குக் கல்வி உதவுதல் வேண்டும். அறமே மனித வாழ்வின் அடிநாதமாகும். அறமில்லா வாழ்வு உயிரில்லாத உடம்பு போன்றது. அறநெறியறிவு கல்வியின் முக்கிய அம்சமாகும்.

கல்வியினூடாக ஒருவன் சிறந்த உளப்பயிற்சி பெறுதல் வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, ஈகை, இன்சொல், தியாகம் ஆகிய பண்புகளையும் கற்றல் அவசியமாகும்.

ஒருவனை சமூகமயமாக்கு வதிற் கல்வி பெரும் பங்கு பெறுகிறது. சூழலுக்கேற்பப் பொருந்தி வாழக்கற்றுக்கொள்வது மாணவரின் கடமையாகும். குழந்தை சூழலுக்கேற்பத் தன்னை மாற்றியமைக்கக் கற்றுக்கொள்ள வில்லையானால் வாழ்க்கையில் தோல்வியடைந்து விடுகிறது. தோல்வி உளவியல் தாக்கங்களை ஏற்படுத்திவிடும் என்பதை ஞாபகத்திற்கொள்ளல் அவசியம். ஆகவே சமூகவியல் பினனாக்குவதற் குரிய கல்வியைக் குழந்தைகளுக் களித்தல் முக்கியமாகின்றது. சமூகப் பயன்பாடு கல்வியால் ஏற்பட வேண்டும்.

கல்வியினூடாக ஒருவன் சீராக வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். கல்வி வாழ்க்கைப்பயனை அளிக்கவில்லையானால் அது பயனுடையதன்று. வாழ்வு நோக்கானது கல்விக்கிருத்தல் இன்றியமையாதது. வெறும் ஏட்டுக் கல்வியால் பயனில்லை. கல்வி ஒருவனை வாழவைக்கவில்லை யானால் அக்கல்வி நோக்கமற்றதாகி விடுகிறது.

கல்வி சிறந்த குடிமகனை உருவாக்குதல் வேண்டும். ஒரு

நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது.

சமுதாயம் பயனடைவதற்குக் கல்வி முறையாக அளிக்கப்படல் வேண்டும். கல்வியறிவில்லாத சமுதாயம் வெளிச்சமின்றி இருட்டில் நிற்கும் ஒருவனுக்குச் சமமானது. சமுதாய நலன்கருதும் மனிதன் கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். கல்வியறிவு சமூகவளர்ச்சிக்கு உதவவில்லையென்றால் அதனால் பயனே இல்லை. இதனையே நவீன கல்வியாளர்கள் இடித்துரைக் கின்றார்கள்.

மனிதன் என்பதற்கு சிந்திக்கும் உயிரி என்பது பொருளாகும். சிந்தனை அடிப்படையில் அறிவு பெருக வேண்டும். சிந்திக்கும் திறனே எதனையும் தூண்டித்துருவி ஆயும் பண்பினை வளர்க்கும். இதன் மூலம் தர்க்க ஆற்றல், காரணகாரியத் தொடர்பு காணும் திறன், பகுத்தறிவு என்பன வெளிப்படுகின்றன.

கல்வி புகட்டும் ஆசிரியர்கள் சீரிய சிந்தனையாளர்களாக விளங்க வேண்டும். தர்க்கரீதியாகச் சிந்தித்துத் தமது ஆசிரியப்பணியை அவர்கள் அமைக்க வேண்டும். இதன் மூலம் கற்க வேண்டியவற்றைக் கற்றுக் கொண்டு, சிந்திக்கும் திறனுடைய வர்களாக மாணவர்களை எளிதாக உருவாக்கவும் முடியும். மாணவரின் உளநிலைக்கு ஏற்றவாறு அறிவு வழியில் அவர்களைச் செலுத்தி அவர்கள் தாமே சிந்தித்துச் செயலாற்ற ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்.

"சோக்கிரட்டீஸ்" கல்வி பற்றி கூறப்புகுந்தபோது கல்விக்கு எல்லை இல்லை, கல்வி என்பது வாழ்க்கை, அதை அடையக்கூடிய ஒரே வழி சுய அனுபவமும் அறிவு சேர்க்கும் ஊக்கமும், தளராத அறிவுத் திறனுமாகும். என்று கூறியுள்ளார்.

கல்வி என்பது வாழ்க்கை என்னும் கருத்தை ஏற்றுக்கொண்ட பிளேட்டோ, அத்தகைய வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு, அனுபவத்திலிருந்து உதிக்க வேண்டும், அந்த அறிவு சிந்தனையைத் தூண்டவேண்டும், சிந்தனைத்தூண்டல் புதுத்தன்மை பெற்று முழுமை பெற்றதாக எல்லோருக்குமுரிய பொதுச் சொத்தாக மாறவேண்டும்" எனக் கூறினார். ஆசிரியர்களைப்பற்றிச் "சோக்கிரட்டீஸ்" கூறும்பொழுது ஆசிரியர்கள் ஞான விளக்குக்களாவார்கள் என்றுரைக்கின்றார்.

ஆசிரியர்கள் போதனையிலும் சாதனையிலும், பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த அறிஞர்களாக விளங்க வேண்டும். ஆசிரியர்கள் ஞானமுள்ளவர்களாகவும் சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றல் உள்ளவர்களாகவும், மனிதரின் கடமைகளை நன்கு உணர்ந்தவர்களாகவும், குழந்தைகள் செய்யும் தவறுகளினால் ஏற்படும் தாக்கங்களைத் தாமே பொறுப்பேற்கும் தன்மை உடையவர்களாகவும்

இருக்க வேண்டும். 'ஆசிரியம்' என்பதற்கு அணிகலனாக விளங்கும் ஆசிரியர்கள் மன்னுயிர்க்கு வரும் துன்பங்களைத் தமக்கு வரும் துன்பங்களாகக் கருதும் தன்மை உடையவர்களாக, கருணையுள்ளம் கொண்டவர்களாக விளங்க வேண்டும். துன்பத்தை துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும் அதிகார அடக்கு முறையால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தாமல் அன்பினால் அரவணைத்து ஆட்கொள்ள வேண்டும். இவையே ரூஸோ கண்ட ஆசிரியப் பண்புகளாகும்.

கல்வி என்பது என்றும் வளர்ந்துகொண்டிருப்பது. சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக்கொண்டிருக்க வேண்டியது. என்றும் இயங்கிக் கொண்டிருப்பது கல்வி. எனவே கல்விக்கு இறுதி இலக்கு என ஒன்றுமில்லை. வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கல்வி, வளர்ந்துவரும் கல்விக்கே வழிகாட்டவேண்டும். செயல் அனுபவமூலம் பெறப்படும் அறிவே உண்மையானது. ஆகவே அறிவு என்பது வாழ்க்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டியங்குவதாகும்.

வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை. தனியாளின் திறன்களை விருத்திசெய்து அவற்றிற்கேற்பச் சூழலைப்பயன்படுத்தி இயலுமான வற்றைப் பூரணப்படுத்திக்கொள்ள அவனுக்குதவுவதே கல்வி. எனவே மனிதன் தனது தேவைக்கும் திருப்திக்கும் இணங்க இயற்கையைப் பயன்படுத்த அறிந்து கொள்ளவேண்டும்.

கல்வி என்பது சமுதாயம் அழியாமற் பேணிக்கொள்வதற்கு வேண்டிய கருவியாகும். சமுதாய அனுபவங்கள் கல்வியினால், கல்வி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டு எல்லோரும் பங்குபெறும் அனுபவங்களாக இருக்கவேண்டும். எனவே கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அதன் மூலம் தனியாள் சிறப்புறச்சமூகம் சிறப்புறும். எனவே கல்வி வாழ்க்கையையும் சமூக முன்னேற்றத் தையும் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள், சமுதாயப் பிரதி பலிப்பாக விளங்கவேண்டும். அவை பிள்ளைகள் இயற்கையான பணிகளைச்செய்து வளர்ச்சிபெறும் இடங்களாகும். இயற்கைப் பணிகள் பிள்ளைகளின் வாழ்வில் உண்மையான பங்கு பெறுவனவாக அமைந்திருந்தாலே அவர்கள் சமூக நிலைகளை எதிர்நோக்கும் சக்தியைத் பெறுவார்கள்.

(தொடரும்..

உ

(தொடர்ச்சி..

# ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் அவதரித்த இணுவில் பெரிய சந்நியாசியார்

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

இது போன்ற சிலைவடிவம் நேபாளம் காத்மண்டுவில் பசுபதிநாதர் சிவாலயத்தில் இலிங்கத்திருமேனி சதுர்வேதங்களையும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களையும் உணர்த்து கின்றது என முன்னோர் கூறினர். இப்பிரமாண்டமான அற்புதமான இறைவடிவத்தை எமக்கு வெளிப்படுத்தி வழிபட வசதிசெய்து தந்தவர் பெரிய சந்நியாசியாராவார்.

பெரிய சந்நியாசியார் காரைக்காலிற் பல அற்புதங்களைச் செய்தபோதும், தமது மூதாதையராற் பராமரிக்கப்பட்ட குலதெய்வமான இணுவில் கந்தப்பெருமானை உள்ளன்போடு வழிபட்டுப் பல அபிவிருத்திகளையும் செய்து வந்தார். நல்ல அமைதியான சூழலில் இறையருள் கைகூடப் பெரியவர் துயின்ற நள்ளிரவில் கனவில் தோன்றிய முருகன் தமது உல்லாசப் பவனிக்காக ஒரு சித்திரகூடமான திருமஞ்சத்தை அமைத்துத் தருமாறு திருவாய் மலர்ந்தருளினார். திருமஞ்சத்தின் அமைப்பு, உருவம் கொண்ட சிறப்பான காட்சியையும் காண்பித்தார். முருகன் நேரில் தோன்றி வடிவமைப்பையும் காட்டி மறைந்த அற்புதத்தைத் தமது தவப்பேறு எனவும், இறைபணிக்குக் கிடைத்த வெகுமதி என்றும் உண்மையான கட்டளை என்பதையும் நன்கு மனத்திற் பதித்து மிக உற்சாகமாகச் செயல்வடிவம் கொடுத்துப் பரவசமானார். மறுநாட்காலை தம்மை நாடிவந்த மெய்யடியார்கள், திருத்தொண்டர்கள் மத்தியில் முருகனின் இனிய அருட்காட்சியையும் நிறைவேற்ற வேண்டிய திருப்பணி பற்றியும் உரையாடினார்.

அற்புதமான திருப்பணியைத் தலைமேற்கொண்ட இறைபக்தர்கள் பெரியாரின் தலைமையில் வேண்டிய சிறந்த தரமுடைய முதிய மரங்களை ஊர்மக்களின் அன்பளிப்பாகப்பெற்றுப் பெரியாரின் வசிப்பிடமான மஞ்சத்தடிப் பகுதியிற் குவித்தனர். போதிய மூலப்பொருட்கள் கிடைத்தபோதும் உரிய திருப்பணியை நிறைவேற்றும் வேலையாட்கள் பற்றி விசனமுற்றார். இவரது அடியார் கூட்டத்தில் ஒருவரும் தமது தீராத நோயிலிருந்து பூரணசுகங் கண்டவரும், இஸ்லாமிய வர்த்தகப் பிரமுகருமான 'செய்யது' என்பவர் தான் அறிந்த சிற்பாசாரியார் பற்றித் தெரிவித்துத் தென்னிந்திய தேவகோட்டையைச் சேர்ந்த முத்துராக்கப்ப ஆசாரியாரை இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குத் திருமஞ்சம் செய்வதற்காக உதவியாட்களுடன் வருமாறு திருமுகம் அனுப்பினார்.

ஒரு சில நாட்களின் பின்

முருகன் பெரிய சந்நியாசியாரின் உருவத்தில் இந்தியாவுக்குச் சென்று முத்துராக்கப்ப ஆசாரியாரின் இடத்தை அடைந்தார். ஆசாரியார் பெரியாரைக் கண்டதும் அவரை வரவேற்று உபசரித்தார். பெரியவர் ஆசாரியாரை நோக்கிச் செய்யது அனுப்பிய திருமுகம் கிடைத்ததா? என வினவினார். இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குத் திருமஞ்சம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளுடன் வரும்படியும் இணுவிலுக்குச் செல்லும் பாதை விபரங்களையும் தெரிவித்தார். தான் அறுபடைவீடுகளுக்குச் சென்று வருவதாகக் கூறியதும் மறைந்து விட்டார். பெரியவரின் தவக் கோலத்தையும் அருட்கலந்துரை யாடலையும் அவதானித்த முத்துராக்கப்ப ஆசாரியார் இணுவிலைச் சென்றடைந்தார். ஆசாரி யார் தங்களிடம் வந்த சந்நியாசியார் ஆறுபடை வீடுகளுக்குச் சென்று விரைவில் திரும்பியதை அற்புதமாக வியந்து உரையாடியதை நினைவு கூர்ந்தார் முருகனின் திருவிளை யாடலை உணர்ந்த பெரியார் தான் இந்தியா செல்லாமல் ஆசாரியாரை அழைத்து வந்த இறைவனின் அற்புதத்தை வியந்து அடியவர்களுடன் உரையாடி மகிழ்ந்தார். முருகனின் திருவருளும் பெரிய சந்நியாசியாரின் சித்து மகிமையும் பொதுமக்களின் பொருள் உதவியும் உலகப்பிரசித்தி பெற்ற 48 அடி உயரங்கொண்ட சித்திரகூடமான திருமஞ்சம் அற்புதக் காட்சியுடன் உருவானது.

இணுவில் கந்தப்பெருமானின் திருப்பதியிலிருந்து கிழக்கேயுள்ள காரைக்கால் சிவன் கோயிலுக்கு ஏழு தேர் பவனி வந்து தீர்த்தமாடி வருவதற்கென 32 முழ அகலம் கொண்ட பெருவீதியை அமைத்தார். தேர்ப்பவனி செல்வதற்கு இடையில் குறுக்கே சென்ற தொலைபேசிக் கம்பிகளை விலக்கி வசதி செய்து தரும்படி அனுமதிபெற எண்ணினார். இப்பகுதிக்குப் பொறுப்பான ஆங்கிலேய அரச அதிகாரியிடம் நேரிற் சென்றார். பெரிய சந்நியாசியாரின் சித்துமகிமைகளை ஏற்கெனவே அறிந்திருந்த அரச பிரதானிகளின் வரவேற்பும் இவரது தவக்கோலமும் ஆங்கிலேய அரச அதிகாரியை நெகிழ வைத்தது. பெரியவருக்கு உரிய மதிப்பளித்துக் குறிப்பிட்ட தினத்தில் ஏழுதேரும் எதுவித சிரமமுமின்றிப் போய்வர வசதியாகத் தொலைபேசிக் கம்பிகள் இறக்கப்பட்டு வசதி செய்யப்பட்டது.

இவரது மகிமையினால் இவரிடம் ஆழ்ந்த துயரத்துடன் வருவோரது பிள்ளைகளின் தடைப்பட்ட திருமணம் நிறைவேற்றுதல், பிள்ளைகள் இல்லாதோருக்குத் திருவருளை முன்னிறுத்திப் புத்திரப்பாக்கியம் பெறச்செய்தமை போன்றவையும் அடங்கும். இவரது மெய்யடியாராகிய கந்தருக்கு ஏற்கெனவே பல பெண் பிள்ளைகள் பிறந்ததால் ஓர் ஆண் மகவு கிடைக்க இறையருளை வேண்டியதுடன் ''உங்களுக்கு

ஆண்மகன் பிறப்பான் அவனுக்கு வடிவேலன் என்று பெயரிடு" எனத் திருவாக்கினால் நற்பலனடையச் செய்தார். வடிவேலன் பெரியவரின் ஆசியுடனும் வழிகாட்டலுடன் வாழ்ந்து தவக்கோலம் பூண்ட வடிவேற் சுவாமியார் என்ற தவப்பொழிவை எம்மண்ணுக்குத் தந்துதவினார்.

இணுவில் கந்தசுவாமி கோயிலின் வடகீழ் வீதியில் பிரபலமடைந்த செல்லப்பா என்பவரை அணுகிய பெரிய சந்நியாசியார் அவரது வீட்டில் அம்பாளை ஆதரிக்கும்படியும் அவளருளால் திருவாக்குச் சொல்லும்படியும் பணித்தார். பெரியாரின் ஆசீர்வாதத்துடன் திருவாக்குச் சொல்லிய செல்லப்பா பொதுமக்களின் உளப்பிணி போக்கியதுடன் உடற்பிணி போக்குவதையும் மேற்கொண்டார். உடற்பிணிக்காகச் சித்த வைத்தியத்தை மேற்கொண்டார். பெரியவரது ஆசியும் வீட்டில் வழிபட்ட அம்பாளின் கிருபையும் செல்லப்பா பின்னாளில் பிரபல சித்த வைத்தியர் செல்லப்பா எனச் சிறப்படைந்தார்.

பெரிய சந்நியாசியார் தாம் இயற்கை எய்துவதற்குச் சில காலங்களுக்கு முன் இணுவைக் கந்தன் கனவிலே கூறியபடி தாம் வாழ்ந்த மஞ்சத்தடி (திருமஞ்ச வேலைகள் முதலில் நடைபெற்ற இடம் காலப்போக்கில் மஞ்சத்தடி என விளங்குகிறது.) பகுதியில் ஒரு குடிசை அமைத்து "வேல்" ஒன்றை நாட்டி வழிபட்டு வந்தார். இப்பெரியார் சமாதியடையும் காலம் வந்ததும் குடிசையின் வாசலில் ஆறடி ஆழமான சமாதிக்குரிய கிடங்கொன்றை தமது அடியார்கள் மூலம் வெட்டுவித்தார். 1917 ஆம் ஆண்டு சித்திரை மாதம் திருவோண நட்சத்திரதன்று சமாதியடைந்தார். இவரது அடியார்களின் வேண்டுதலின் பேரில் அவரால் அமைக்கப்பட்ட கிடங்கிலே சமய விதிப்படி சமாதி அமைந்தது.

முருகன் அருளாற் பெரிய சந்நியாசியாரின் குடும்பத்தினர் அவர் சமாதியடைந்த 16 ஆம் நாள் சமாதியின் மீது பெரியவரால் வணங்கப்பட்ட வேல் நாட்டப்பட்டது. பொதுமக்களினால் அபிஷேகங்கள் பூசைகள் உரிய முறைப்படி நடைபெற்றன. இந்த வழிபாடு தெய்வமான மஞ்சத்தடி முருகன் அருணகிரி நாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் என வழங்கப்பட்டு வருகிறது. பெரிய சந்நியாசியாரின் சித்து மகிமையால் ஓர் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயமாக அமைந்தது இறைவன் திருவருளாகும். இத்திருக்கோயிலின் தீர்த்தோற்சவம் இவர் சமாதியடைந்த சித்திரை மாதத் திருவோண நட்சத்திரத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெருஞ்சித்தர் பெரிய சந்நியாசியார் என்ற துறவி தமக்கென ஏதும் தேடாத தெய்வீகப் பிறவியாகவும் வாழ்ந்தார்.

"தவமும் தவமுடையோர்க்காகும்"

உ

# சுவாமி மலையுறையும் சுவாமி நாதன்

தி. மயூரகிரிசர்மா அவர்கள்

நீரகத்தே தனை நினையுமன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாம் தலைமையெய்திய
ஏரகத்தறுமுகன் அடிகளேத்துவாம்

-கந்தபுராணம்-

உலகமுய்ய முருகக்கடவுள் இப்பூவுலகில் பல திருத்தலங்களில் உறைகின்றான். என்னும் அவற்றுள் ஆறுபடைவீடுகள் சிறப்புடையன. அவற்றுள்ளும் திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை எனும் மூன்று பதிகள் மிகச்சிறந்தவை. ஆயினும் "அநாகதம்" எனப்படும் இருதய ஸ்தானத்திற் காணப்படும் "திருவேரகத்திருப்பதி" எனப்புகழப்படும் சுவாமிமலை வைணவர்கட்குத் "திருவரங்கம்" போலவும் சைவர்கட்குச் "சிதம்பரம்" போலவும் சிறப்புற்று விளங்குகின்றது. இது, தமிழகத்தின் நடுப்பகுதியை ஒட்டி மிகவும் சிறப்பாக "மகாமகப் பெருவிழா" நிகழ்கின்றதும் அதிகளவு ஆலயங்களை உடையதுமான கும்பகோணத்திலிருந்து எட்டுக்கிலோ மீற்றர் தொலைவில் புகழ்மிகுந்த சோழ மாமண்டலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் அமைந்துள்ளது. இது ஆறுபடைவீடுகளுள் நான்காம்படை வீடாகும்.

அடியவர் தமது மனதினை அருள் என்னும் ஏர் கொண்டு உழுது அன்பு எனும் பயிர் வளர்க்கின்ற இடமாதலில் இது "ஏரகம்" எனப்படுகின்றது. இங்கு செவ்வேட் பரமன் பல அற்புதங்களைப்புரிந்து கொண்டு அழகேயுருவமென வீற்றிருக்கின்றான். இந்த ஸ்தலத்தில் திருமுருகன் சிவபெருமான் மகிழ உபதேசம்செய்த காரணத்தினால் இப்பெருமான் "ஸ்வாமிநாதஸ்வாமி" எனப் புகழ்படுகின்றான். ஏனெனில், மற்றும் திருச்செந்தில் போன்ற தலங்களில் குமரன் சிவனை இலிங்கத்திற்றாபித்து வழிபட்டான். ஆனால், இங்கு சிவன் முதலாக விஷ்ணுவும் நான்முகனும் மற்றையோரும் இணைந்து முருகனை வழிபட்டு அருள்பெற்றதாகப் புராணங்கள் பகருகின்றன. இதுவே இத் தலத்தினது தனிச்சிறப்பாகும்.

சுவாமிமலைத்திருத்தலமானது சங்ககாலத்திலிருந்து புகழ் பெற்றுள்ளது என்பதைப் பழைமை யான சில பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன. திருமுருகாற்றுப் படையானது திருஏரகத்தில் அறுவகைத்தொழில் புரிவோரும் நாற்பத்தெட்டாண்டு பிரமச்சரியம்

காப்போரும் மூவகைத் தீயால் வேள்விபுரிவோருமான அந்தணர்கள் வாழ்கின்ற கந்தனுறையும் மாபெரும்பதி எனச் செப்புகின்றது. சிலப்பதிகாரந்தந்த இளங்கோவடிகள் முருகவேள் நீங்காது உறையும் பதிகளை விபரிக்கையில்

"சீரகெழு செந்திலும் செங்கோடு வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்"

என்கிறார். இன்று சிலர் ஏரகமும் சுவாமி மலையும் வேறு எனக்கருதுகின்றனர். எனினும் அருணகிரிநாத சுவாமிகள்

"ஏரகவெற்பெனும் அற்புதமிக்க சுவாமிமலைப்பதி
மெச்சிய சித்த ராஜத லக்ஷ்மி பெற்றருள் பெருமாளே"

என்று சுவாமி மலையும் ஏரகமும் ஒன்று எனத்தெளிவுறுத்துகின்றார்.

கும்பகோணத்தில் அமிர்த கலசம் வைத்துப் பிரம்மதேவர் ஓர் பிரளய காலத்தின்பின் வழிபாடு செய்கையில் சிவன் ஓர் வேடனாகத் தோன்றிக் கலசமுடைக்கையில் அமிர்தம் சிந்திய "பஞ்சகுரோசதலங்களுள்" சுவாமிமலையும் ஒன்றாகும். மேலும் சுவாமிமலைக்கோயில் வரலாற்றை நோக்குகையில் முருகன் கைலையில் திருவாயிலுக்கருகில் விளையாடிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த நான்முகன் கந்தனைப் பராமுகப்படுத்திச் சென்ற சமயம் நம் இறைவன் குமரன் அவரை அழைத்து "உனக்குப் பிரணவத்தின் பொருள் கூறமுடியுமா?" என வினவி அவரைச் சிறையிலிட்டனன். இந்த அற்புத விளையாட்டினை அறிந்த சிவன் குகனை அழைத்துச் சுவாமி மலையிலே பிரணவப் பொருளை உபதேசிக்கப்பெற்று முருகவேளைக் குருவாக வழிபட்டார். பின் திருவுள்ளத்துதித்த கருணையால் கந்தன் பிரமனைச் சிறையினின்று விடுவிக்க அதனால், மிக மகிழ்ந்த பிரம்மன், விஷ்ணு, இந்திரன், நந்தியெம்பிரான் யாவரும் இணைந்து ஸ்வாமிமலையில் ஸ்வாமிநாதனுக்கு வழிபாடு புரிந்து மகிழ்ந்தனர். இதனையே திருப்புகழில்

"குருவாயரர்க்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்காலமிக்க வளர்பூகமெத்து
குடகாவிரிக்கு வடபாலார்
திருவேரகத்திலுறைவாய்"

என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். மேலும் இத்தலம் நீரகம், குருமலை, குருகிரி, ஏரகம், பேரகம், ஞானகிரி, ஸ்வாமிகிரி எனப்பல நாமமுடையது. மேலும் முருகனடியார்களில் எவரும்

திருவேரகத்தைத் துதிக்க மறந்திலர். யாவரும் ஸ்வாமிநாதனைச் செந்தமிழ்ப் பாசுரத்தினாற் போற்றித் துதி செய்திருக்கின்றனர்.

அருணகிரிநாதர் சாமிமலைத் திருத்தலத்தில் பாததரிசனமும் மஹா மந்திர உபதேசமும் பெற்றுப்பூரித்தார். பூமிதேவி தன் சாபம் நீங்க இங்கே குமரனை வழிபட்டு விமோசனம் பெற்றாள். எனினும் சாமிநாதரைப்பிரிய விரும்பாது நெல்லிமரமாய்த் தலவிருட் சமாக விளங்குகின்றாள். வள்ளி மலைச்சுவாமிகளும் ஏரகநாதனடி போற்றி உபதேசம் பெற்றிருக் கின் றார்கள். இந்தத் தலம் விண்ணுயர்ந்த பல கோபுரங்களுடன் விளங்குகின்றது.

நான்கு அழகிய பிரகாரங் களையும் கொண்டு திகழ்கின்றது. அத்தோடு ஸ்வாமிமலை உள்ள பகுதி இயற்கையாக மலைசூழ் பகுதியன்று. மலை ஒன்று செய்யப்பெற்று அதன்மேற் கோயில் அமைந்துள்ளது. அற்புதமான அறுபது படிகள் உள்ளன. அவை தமிழ்வருடம், அறுபதை குறித்து நிற்கின்றன. கீழைப்பிரகா ரத்தில் வஜ்ஜிர தீர்த்தம் உள்ளது. படியேறுகையில் "விந்தைப்புதல்வன் தந்தைக்கு மந்திரம் மொழியும்" அற்புத சிற்பம் உள்ளது.

சுவாமிமலைத் தலத்தினிலே தங்க துவஜதம்பம், தங்கரதம் ஆகியன உள்ளன. இங்கு ஸ்வாமி நாதனை வணங்கிச்சிறப்புற்ற இந்திரன் ஹரிகேசன் எனும் அசுரனை அழித்தான். பின் அந்நன்றிக்காகத் தன் ஐராவதத்தை இங்கே விட்டுவிட்டுச் சென்றதாக வரலாறு கூறுகிறது. தில்லைவாழ் அந்தணர்கள் போல ஏரகத்தந்தணர் சிறப்புற்று இருந்ததில்லை. திருமுருகாற்றுப்படை மட்டுமன்றி "ஞானமுறு தபோதனர் சேரும் சாமிமலை" என அருணகிரிநாதரும் பாடிமகிழ்கிறார். இந்தத் திருத்தலத்தில் ஸ்வாமிநாதர் திருக்கைவேலால் உண்டாக்கப் பெற்றது நேத்திர தீர்த்தம் எனப்படுகின்றது.

கார்த்தவீரிஜார்ஜுனன் என்பவன் இந்தத் தலத்திருப்பணிகளைச் சிறப்புறச் செய்தான். பின்வந்த சில மன்னர்களும் பல திருப்பணிகள் புரிந்தனர். இங்கே ஸ்தல விநாயகராக "நேத்திர கணபதி" உள்ளார். இந்தத் திருத்தலத்திற்குத் தென்மேற்கே இவ்வாலயத்தாற் பரிபாலிக்கப்பெறும் வலஞ்சுழி சுவேதவன கணபதி என்ற விநாயகர் ஆலயம் உள்ளது. சுவாமி மலையில் குருவாரம் எனும் வியாழக்கிழமைத் தரிசனம் சிறப்புடையது. சகல பாவங்களும் நீக்கும் குகன் உறையும் இத்தலத்தில் கார்த்திகை மாதம் வெகுசிறப்பாகப் பிரமோற்சவம் நிகழுகின்றது. மேலும் ஆடிக் கிருத்திகை, கந்தசஷ்டி, வசந்தோற்சவம் முதலியனவும் சிறப்புற நிகழுகின்றன. இத்தலத்தில் திருமணங்கள் பல நூற்றுக்கணக் கென வருடந்தோறும் நிகழுகின்றன. எனவே தமிழ்நாட்டில் பலருக்கும் குலதெய்வமாக விளங்கும் திருவேரகத்துறையும் சுவாமிநாத ஸ்வாமியை வழிபட்டு அவனருள் பெற்றுய்வோமாக.

துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபடவேண்டும்.

உ

(தொடர்ச்சி..

# யார் இந்த (ச்) செல்லம்மா?

*சச்சிதானந்தா ஆச்சிரமம்*

**ஸ்ரீசச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்**

## குருநாதரின் வழிநடத்தலில்

சந்தையடியில் இறங்கிய அம்மையார் அருகிலே ஒரு வீட்டுக் கிணறு தெரியவே அவ்வீட்டருகில் சென்றார். அங்கு இரு பெண்கள் இருக்கவே குடிப்பதற்கு தண்ணீர் தருமாறு கேட்டார். அவர்கள் அருகிலிருந்த கிணற்றடி காட்டி அங்கு போய்க் குடிக்குமாறு கூறினார்கள். அம்மா கிணற்றடிக்கு சென்றார். அங்கு வாளி இருக்கவில்லை. எவராவது குளிக்கவந்தால் தண்ணீர் குடிக்கலாம் என எண்ணி ஆடுகால் மரத்தின் கீழ் குந்தி இருந்தார். இக்கிணறு இருவீடுகளிற்கு பொதுவானது. இரு வீட்டாறிற்கும் சண்டை அதனால் இரு வீட்டாரும் தனித்தனியே வாளி வைத்திருந்தனர். ஓர் வீட்டில் இருந்து ஒருவர் வாளியுடன் வந்தார். தண்ணீரை அள்ளிக் குளிக்கவாரம் பித்தார். அதனைக் கண்ணுற்ற அவரது மனைவி "அங்கை ஒரு மனுசி தண்ணி குடிக்கவெண்டு ஆடுகாலுக்கு கீழே இருக்கிறது. தெரியேல்லையோ" எனக் கணவனாரை ஏசினார். அம்மணி யாரைத் தெரியும், அவ அந்த வீட்டு வளவுக்குள்ளாலை வந்தவ அது தான் நான் அவையின்ரை ஆட்களோ எண்டு நினைச்சுப்போட்டன்" எனக் கூறி வாளியை அம்மையாரிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

அம்மையாரும் சிறிது நீர் அள்ளிக்குடித்துவிட்டு, சேலையை தண்ணீரில் அலம்பிக் காயவிட்டு குளிக்கத்தொடங்கினார். குளித்து விட்டு சேலை காயும்வரை ஆடுகாலின்கீழ் ஈரத்துணியுடன் குந்திக்கொண்டிருந்தார். பசி வயிற்றைக் கிள்ளியது. குரு நாதனையும் இறைவனையும் நினைந்து உருகியவண்ணம் அவர் அங்கு அமர்ந்திருந்தார். அப்போது அவ்வீட்டுப்பெண் ஒரு பெரிய குவளை நிறைய சுடச்சுட தேநீர் கொண்டுவந்து அம்மையாரின் முன் வைத்துவிட்டு, தேநீரைக் குடிக்குமாறு வேண்டினார். அம்மையாரோ, குருநாதா நீ என்னைக் கைவிடவில்லை, என்று கண்ணீர் மல்கித்துதித்து அத்தேநீர் முழுவதையும் குடித்து முடித்தார். பின்பு அம்மையார் கிணற்றடியால் எழுந்து நடந்து அவ்வீட்டடியால் நடந்து செல்லும்போது அவ்வீட்டுப் பெண் அம்மையாரை அழைத்தாள்.

அப்பெண்மணி ஓர் சாப்பாட்டுக் கடை வைத்திருந்தாள். அப்பெண் ஓர் பெரிய தட்டு நிறைய சோறும்,

கறியும் தனது கடையில் இருந்து எடுப்பித்து அம்மையாரிற்கு கொடுத்தார். அம்மையாரோ வயிறு நிறைய தேநீர் குடித்திருந்ததால் அவரால் சாப்பிட முடியவில்லை. கொஞ்சம் சாப்பிட்டு விட்டு இருக்க, ஏன் சாப்பிடவில்லை என அப்பெண்மணி கேட்டாள். தனக்குப்போதும், பசியில்லை என அம்மையார் கூறினார். அப்பெண்மணி அம்மையாரிற்கு ஒரு ரூபாய் காசும், ஒரு சீப்பு வாழைக்காயும் கொடுத்தார்.

இச்சம்பவங்களின் பின்னர் அம்மையாரிற்குப் பிச்சையெடுப்பதற்கு இருந்த கூச்சம் சிறிது குறைந்து விட்டது. தவநோக்கிற்காகவே, பிச்சை ஏற்கிறோம் எனும் எண்ணம் அவரின் உள்ளத்தை திடப்படுத்தியது.

சிறிது நடந்து சென்ற அம்மையார் அருகிலிருந்த ஒரு வீட்டிற்குச் சென்றார். வாசலில் நின்று "அம்மா பிச்சை" என்று அழைத்தார். அங்கிருந்த ஒருவர், "பிச்சைக்கு வந்தவையை மினக்கெடுத்தக் கூடாது. ஒரு சதம் கொடுத்து விடு" எனக்கூற உள்ளிருந்து வந்த ஓர் பெண்மணி ஒரு சதத்தினை அம்மையாரிடம் கொடுத்துவிட்டார். அம்மையாரும் அதனை வேண்டிக்கொண்டு புறப்பட்டார்.

சில வீடுகளில் 12 மணிக்குப்பின் பிச்சை போடுவதில்லை எனக்கூறி அனுப்பி விட்டார்கள். அம்மையார் இவ்வாறு பல வீடுகளைக் கடந்து செல்லும்போது ஓர் வீட்டிற்குச் சென்றார். அங்கு நின்ற பெண்மணி முதலில் ஏதும் இல்லை எனக்கூறி அனுப்பினார். அம்மையார் வாசலிற்குச் சென்றதும் மீண்டும் கூப்பிட்டு நல்ல தேகமாய்க்கிடக்கு இங்க வேலைக்கு நில்லன், மாதம் முப்பது ரூபா தாறன் எனக்கேட்டாள். அம்மையாரிற்கு அப்பெண்மணியின் ஏளனமான பேச்சு கொதிப்பை ஏற்படுத்தியது. "உங்களுக்கு எத்தனைபேர் வேணும்? எங்களிலை கன ஆட்கள் இருக்கினம்" எனச்சூடாகக் கூறினார். அப்பெண் மணியும் ஆத்திரமுற்றவளாய் "உன்னைக் கேட்டால் நீ வேறயாட்களைச் சொல்கிறாய்" என்று ஏசிவிட்டு உள்ளே சென்றார்.

அம்மையார் இவ்வாறு பல அனுபவங்களைப் பெற்றவராய் வீடு வீடாகச் சென்ற வண்ணம் இடைக்காட்டை அடைந்தார். அங்கு சிறு குடிசைக்குச் சென்றார். அங்கு சந்தையில் வியாபாரம் செய்யும் இரு வயது முதிர்ந்த பெண்கள் இருந்தனர். அவர்கள் தமக்குள் ஏதோ கதைத்த வண்ணம் இருந்தனர். அம்மையாரைக் கண்டதும் அவர்கள் எழுந்து அம்மையாரை வரவேற்று அங்கிருந்த ஓர் வாங்கைத் துடைத்து அவரை அதில் அமரச்செய்தனர். அம்மையாருடன் அன்புடன் கதைத்தனர். பின் அம்மையாரிற்கு தேநீரும் கொடுத்து வெற்றிலையும் கொடுத்தனர். தாம் சந்தைக்கு கொண்டு செல்லும் கடகத்துள் தேடி ஆளிற்கு மூன்று சதமாக அம்மையாரிடம் கொடுத்தனர். பின்

ஆறுதல் கூறுபவனிற்கு தலைவலி வராது.

"நாங்கள் நல்லா இருப்போமோ" என அம்மையாரிடம் அவர்கள் கேட்க, அவர்களின் அன்பையும் உபசரிப் பையும் நோக்கிய அம்மையார் "உங்களிற்கு ஒரு குறையும் வராது" எனக்கூறி அவர்களிடம் இருந்து விடைபெற்றார். விடைபெறும்போது மீண்டும் இவ்வழியால் வந்தால் தம் குடிசைக்கும் வருமாறு கூறி அவரை வழியனுப்பி வைத்தனர்.

இக்குடிசையிலிருந்த பெண்கள் இருவரின் பண்பு அம்மையாரின் சிந்தனையைத் தூண்டியது. ஏழைகளாக இருப்பினும் பண்பில் அவர்கள் செல்வந்தர்கள்தான் என எண்ணினார். ஆனால் பெரிய பொருட் செல்வங்களுடன் இருப்பவர்கள் கருமிகளாகவும் பண்பற்றவர் களாகவும் இருந்ததையும் அவர் கண்ணுற்றார். இவ்வாறாக அவர் செல்லும்போது ஓர் கிறிஸ்தவர்கள் வீட்டிற்குச் சென்றார். அங்கு அவர்கள் "நாம் கிறிஸ்தவர்கள், நீங்களோ இந்து சமயத்தவர், எங்கள் வீட்டில் தண்ணீர் குடிப்பீர்களா?" எனக் கேட்டார்கள். அம்மையாரும் அதில் ஒன்றுமில்லை என்று கூற அவர்களும் நல்ல பக்குவமாய் ஓர் குவளையைக் கழுவி அதில் சோடா ஊற்றிப் பணிவுடன் அம்மையாரிற்குக் கொடுத்தனர். அவர்களின் அன்பையும் பக்குவத்தையும் நினைந்து உருகிய அம்மையார் அதைக்குடித்துவிட்டு அங்கிருந்து தொடர்ந்து பல வீடுகளில் பிச்சை எடுத்தபடி செல்வச் சந்நிதி கோயிலை நெருங்கினார். பிச்சை யெடுத்த பொருட்களை ஓர் மூட்டையாகக் கட்டி தலையில் வைத்துச் சுமந்தபடி அம்மையார் நடந்து கொண்டிருந்தார்.

பாதை தெரியாது, இதுவரை பலரிடம் கேட்ட ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் எண்ணி கண்ணீர் வர நீரினூடு கரைவழியே நடந்து செல்கிறார். இடுப்பளவு நீரினூடே நடக்கும் போது, இனி செத்தாலென்ன? மானங்கெட்ட பேச்சுக்கள் எல்லாம் வேண்டிப் போட்டேன் என்று எண்ணியபடி செல்கையில் தூரத்தில் தம் குருநாதராகிய சுவாமிகள் நடந்து செல்வது தெரிகிறது. அவர் தம்புச்சாமி மடத்தை நோக்கிச் செல்வதைக்கண்ட அம்மையார். விரைவாக நடந்து சென்றார். மடத்தை அடைந்ததும் சுவாமிகள் தரையில் உட்கார்ந்தார். அம்மாவைக் கண்டதும் "அட வா, வா அம்மா! இரு, இரு அ என்று அம்மையாரை அங்கு அமரச்செய்தார். சரி என்ன நடந்தது எல்லாத்தையும் விபரமாகச் சொல்லு பாப்பம், என்றார் சுவாமிகள். அம்மையாரும் பிச்சையேற்ற பொருட்களையெல்லாம் சுவாமிகளின் காலடியில் வைத்து கண்ணீர் பெருக அழுது குழறினார். சுவாமிகளும் "சரி சரி நடந்ததைச் சொல்லு அழாதை" என்று கூறி நடந்த விபரம் கேட்டார். அம்மையாரும் பிச்சையேற்ற வரலாற்றைச் சொல்லலானார்.

(தொடரும்...

உ

# குழந்தைகட்கு இறைவன் நாமம் வைப்பது ஏன்?

ஆர். வீ. கந்தசாமி J.P அவர்கள்
(இளைப்பாறிய கால்நடைப் போதானாசிரியர்)

தற்போது ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததும் அதற்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்னும் பிரச்சினை போல், முன்பு கிடையாது. ஆண் குழந்தை பிறந்தால் பாட்டனார் பெயரை வைப்பார்கள். பெண் குழந்தை பிறந்தால் பாட்டியின் பெயரை வைப்பார்கள். அவை யாவும் தெய்வங்களின் பெயராகவே இருக்கும்.

ஆனால், தற்போது கடவுளின் பெயரை விட்டு வேறு என்ன நாகரிகமான பெயர் வைக்கலாம் எனக் குடும்பங்களில் தகராறு ஏற்படும். மேல் நாட்டார் போல் தங்களின் பிள்ளைகளுக்கும் பெயர் வைக்க வேண்டும் என்னும் மோகத்தால் நாம் உச்சரிக்க முடியாத பெயர்களை வைக்கின்றார்கள். இது நாம் செய்யும் மாபெரும் தவறாகும்.

குழந்தைகளுக்குக் கடவுளின் பெயர்களை வைக்க வேண்டும் என்று நம் மூதாதையர் கொண்டிருந்த வழக்கத்திற்கு ஒரு அடிப்படைக் காரணம் உண்டு.

எங்களுக்கு வயது ஆக, ஆக, எமக்குக் குடும்பத்தில் உள்ள பற்று, பாசம் குறைந்து ஆண்டவன் மீது பற்று, பாசம், பக்தி அதிகரித்து அவன் கழல் நாடவேண்டும். ஆனால் அதற்கு மாறாக இப்போது குடும்பத்தினரிடம் பற்று அதிகரிக்கின்றது. அதுவும் பேரன், பேர்த்தி மீது உள்ள அன்பு அதிகமாகின்றது. இந்தப் பாசத்தைப் பயன்படுத்தி நம் முன்னோர்கள் நம்மை ஆண்டவனை நினைக்க வைத்தார்கள். பேரன் பேர்த்தியர்க்குக் கடவுளின் பெயர்கள் வைத்தால் அந்தப் பெயரைச் சொல்லி அவர்களைக் கூப்பிடுவோம். அப்போது ஆண்டவன் ஞாபகம் வரலாம். அப்படி வராவிட்டாலும் கடைசிக் காலத்தில் ஆண்டவன் நாமங்களைத் தெரிந்தோ தெரியாமலோ சொன்னாலும் முத்தி உண்டு என்றார்கள் பெரியோர்கள், ஆனபடியால், தான் மரணத்தறுவாயில் இருக்கும் ஒருவருக்கு எமது முன்னோர்கள் அவர் காதிற்குக்கிட்ட வாயை வைத்து "ஓம் சிவாயநம" என்னும் மந்திரத்தை ஓதுவார்கள்.

பாகவதத்தில் வரும் அஜாமிளன் கதை இதற்குச் சான்று பகருகின்றது.

"அஜாமிளன் என்னும் பாவி ஒருவன் சாகும் தறுவாயில் இருக்கின்றான் யமதூதர்கள் அவன் முன்னே நிற்கின்றார்கள், அவனுடைய இளைய மகன் நாராயணன் தூர விளையாடிக்கொண்டு நிற்கின்றான். உடனே தன் மகனை, "நாராயணா, நாராயணா" என்று உரக்கக் கூப்பிடு கின்றான். உடனே விஷ்ணு தூதர்கள் ஓடிவந்து யமதூதர்களை தடுக்கின்

றார்கள். இரண்டு பிரிவினருக்குமிடையே ஒருவாக்கு வாதம் நடைபெறுகின்றது. இதோ வருமாறு,

யமதூதர்கள்:- யமதர்மராசாவின் ஆணைக்குத் தடையாக நிற்கும் நீங்கள் யார்?

வி.தூதர்கள்:- நாங்கள் விஷ்ணு தூதர்கள் நீங்கள் யமதூதர்களாக இருந்தால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். மனிதர்களில் எல்லாப் பாவிகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்களா? அல்லது சிலர் தானா?

யமதூதர்கள்:- இவன் மிகப்பெரிய பாவி அதனால் இவனைத் தண்டிக்க யமதர்மனிடம் இழுத்துச் செல்கின்றோம்.

வி.தூதர்கள்:- இவன் பாவியல்லன் இவன் தன் பாவங்களுக்கு எல்லாம் பிராயச்சித்தம் செய்துவிட்டான்.

யமதூதர்கள்:- எப்படி?

வி.தூதர்கள்:- எப்போது "நாராயணா" என்று பகவானுடைய நாமத்தைச் சொன்னானோ அப்பொழுதே அவன் கோடி ஜென்மங்களிற் செய்த அத்தனை பாவமும் போய்விட்டது.

யமதூதர்கள்:- அவன் பகவான் நாராயணனைக் கூப்பிடவில்லையே, தன் மகன் நாராயணனை அல்லவா கூப்பிட்டான்?

வி.தூதர்கள்:- இருக்கட்டுமே! தெரிந்தோ, தெரியாமலோ நெருப்பிற் கையை வைத்தால் அது கட்டாயம் சுடும். அதேபோலப் பகவானுடைய நாமமும், தெரிந்து சொன்னாலும் பலன் உண்டு. தெரியாமற் சொன்னாலும் பலன் உண்டு. அதனால், அவனை விட்டுவிடுங்கள் என்றார்கள்.

யமதூதர்கள் அஜாமிளனை விட்டுவிட விஷ்ணு தூதர்கள் அவனை வைகுண்டம் அழைத்துச் சென்றார்கள்.

தவறுதலாகவாவது நாம் இறைவன் நாமங்களைச் சொல்ல வேண்டுமென்று தான் நம் மூதாதையோர் இறைவன் பெயர்களை நமது குழந்தைகளுக்கு வைத்தார்கள். ஆனால், தற்போது அப்பழக்கம் அருகி வந்துவிட்டது. ஆனபடியால், இனிமேலாவது நாம் எல்லோரும் நம் குழந்தைகளுக்கு இறைவன் நாமம் இட்டு இறைபதம் அடைவோமாக.

**பணிவு**

நீ உயர்வடைய வேண்டுமானால் உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவே எப்போதுங் கருது; "நான் மேலோன்" என்று நினைத்து தருக்குறாதே. சிறந்தவன் என்று எண்ணுகின்ற எண்ணத்தால் உயர்வடைய முடியாது. ஆதலினால் உன் மனதில் தாழ்மை இருக்கட்டும்.

கடவுளிற்கு அடுத்தது பெற்றோரே தெய்வம்.

உ

(தொடர்ச்சி....

# அருணகிரி சுவாமிகள் அருளிய

# கந்தரலங்காரம்

பண்டிதர் திரு சி. வேலாயுதம் அவர்கள்

### ஈகைக்கு என்னை விதித்திலை

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தனர்ந்தவர்கொன்
றீகைக்கு என்னைவிதித் தாயில்லை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கட றீக்கொளுந்த
வாகைச் சிலைவனைத் தோன்மரு காமயில் வாகனனே.

இலங்கை மாநகரத்திற்குச் செல்வதற்கு நீ வழிகாட்டக் கடவாய் என்று சென்று கடலானது நெருப்புப்பற்றச் செய்ய வெற்றி பொருந்திய கோதண்டத்தை வளைத்தவராகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு திருமருகரே! மயிலை வாகனமாக உடையவரே இறப்பதற்கும் பின்னர் திரும்பத் திரும்பப் பிறப்பதற்குமல்லாமல் வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவி செய்வதற்கு அடியேனை ஏற்படுத்தினாய் இல்லையே! இது என்ன நியாயம்.

### தொண்டு செய்யாதவர் இயமனுக்கு என் செய்வார்

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மாறார்தினைப் போதனவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழுப்புசெய்யா ரென்செய் வார்யம தூதருக்கே

அகங்காரம், மமகாரம் (நான், எனது) என்ற இரண்டையும் ஒழித்து அடங்கார், பொறிபுலன்கள் ஒடுங்கப்பெறார். பேரின்ப வெள்ளத்தே மூழ்கிநிறைவு பெறார். நினைப்பையும் மறப்பையும் அற்று சமாதி நிலையிற் பொருந்தார். ஒரு தினையளவு காலமாயினும் ஓங்காரமாகிய நாதத்துக்குள்ளே ஒளிரும் சோதியினுள்ளே முருகனின் திருவுருவத்தைத் தரிசித்து ஆங்கு உறங்கவும் மாட்டார். தொண்டு செய்யார். இயமதூதர் வந்து உயிரைக் கவரும்போது மேற்கூறிய ஆறினுள் ஒன்றையேனும் செய்யாதார் என்ன உபாயம் செய்வார்களோ.

### முருகன் கவிகேட்டு உருகுவீர்

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரேரி வாய்நகரக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

வலிமையுடைய கிரவுஞ்ச மலையானது பிளக்கும்படி வேற்படையைவிட்ட முருகப்பெருமானது அருட்பாடல்களை செவிகுளிரக்கேட்டு உள்ளம் உருகியும் ஏனைய கவிகளைக் கற்காதிருப்பீர்களாக! நெருப்புடைய நரகக் குழியினையும் நரகத்திலுள்ள துன்பமும் அடைந்து தாகம் மிக யமபுரிக்குப் போகும் மார்க்கமும் அதிலுள்ள துன்பத்தையும் மறந்தவர்களுக்கு உய்யுமாறு கூறுங்கள்! கூறுங்கள்.

### முருகனைத் துதித்து அறம்புரிக

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்த
மிருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

பெரிய தீவினையை உடைய நாம் செத்தோமாயின் மாயை பொருந்திய உடலாகிய இது ஒரு பிடியளவு சாம்பரும் ஆகாது ஒழியும், அழியும் ஆதலால், போர் செய்யவல்ல ஆண்யானையும், பெண்யானையும் கலந்து விளையாடும் தினைப்புனத்திலுள்ள சிறியமான் பெற்றெடுத்த பெண்யானை போன்றவளாகிய வள்ளிநாயகிக்குத் தலைவனே! ஆறு திருமுகங்களை உடையவரே! என்று கூறித்துதித்து பிடியளவு சோறாவது அன்புடன் யாசிக்கும் வறியவற்கோ, இறந்தோர்க்கோ பரிமாறி நீயும் சாப்பிட்டு இருப்பாய்.

(தொடரும்...

### இன்பம் துன்பம்

துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பமாவது அறிவில்லாதவர்களோடு பழகுவதேயாம். இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பமாவது அறிஞர்களோடு பழகுவதே.

அறிஞரோடு பழகும் போது உண்டாகும் இன்பம் இமையவருலகிலு மில்லை. மொழிக்கு மொழி தித்திக்கும் இனிய மொழிகளும் அறிவுரைகளும் அறிஞரிடமுண்டாகின்றன. அவற்றால் உன் உள்ளம், உயிர், உணர்ச்சி ஆகிய அனைத்தும் குளிரும்.

திருவாசகவிழாவின் போது நல்லை ஆதின முதல்வரும் ஆசிரிய ஆலோசகர் கந்தசத்தியதாசன் அவர்களும் பங்குபற்றிய நிகழ்வு.



ருவாசகவிழாவின் போது திருவாசக ஏடுகளும் நாயன்மார்களது ருவ ப்படங்களும் தாங்கி வரும் நிகழ்வு.



உ

# பகுத்துண்ணல்

குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"
"ஐயமிட்டுண்"
"தானங்களிற் சிறந்தது அன்னதானம்"

என தலை சிறந்த வாழ்க்கை நெறிகளை வகுத்து வாழ்ந்து காட்டியவர்கள் எமது முன்னோர்கள்.

நல்ல வழியாற்றேடிய பொருட்களைப் பகுத்துத் தானும் உண்டு, ஏனைய உயிர்களுக்கும் கொடுத்து அவைகளையும் காப்பாற்றுதல், அறங்கள் எல்லாவற்றினுள்ளும் தலையாய அறமாகும்.

பசிப்பிணியே உடலுக்குவரும் நோய்களுள் மிகக் கொடியது. அதுவே ஏனைய நோய்களுக்கும் காரணமாகின்றது. இதனாலேயே ஔவைப் பிராட்டியாரும் "கொடிது, கொடிது, வறுமை கொடிது" என்றார். பசிப்பிணியைப் போக்க வல்லவர்களே உண்மையான வள்ளல்கள் என உலகம் போற்றி வந்தது.

உயிரை வளர்க்க வேண்டுமானால் உடல் ஓம்பப்பட வேண்டும். எனவே, உடல் புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல, என்கிறார் திருமூலர். உடலை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததாகும். அதனாலேயே "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்று திருமந்திரம் கூறுகிறது.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து தரப்பினரையும் பாதுகாத்து அவர்களுக்கு உணவளித்தல் இல்வாழ்வானின் கடமை என வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கின்றார். வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடாத்துவதெல்லாம், பசித்து உணவு கேட்டு வருபவர்களுக்கு உணவளிப்பதற்கேயாகும். தம்மை நோக்கி உணவு கேட்டு வந்தவர்கள் புறத்தே இருக்கத்தக்கதாகத் தான் மட்டும் உண்டு இன்புறுவது சைவநெறிக்குப் புறம்பானது. இவ்வாறு செய்வதனாலேயே, சைவநெறிப்படி இல்லறம் நல்லறமாகியது. பசித்தவர்களுக்கு உணவளித்தபின், மிஞ்சிய உணவினைத் தாம் உண்டு வாழ்பவர்களைத் துன்பம், துயர், இடையூறுகள் அணுக அஞ்சுகின்றன. இவர்களின் வாழ்க்கையில் எந்நாளும் இன்பம் பொங்கும்: இவர்கள் துன்பத்தில் துவண்டு வருந்துவதில்லை.

சைவமரபு, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பினைக் கட்டி வளர்த்து வந்திருக்கிறது. கோயில்களுக்கு அணித்ததாகத் திருமடங்கள், சத்திரங்கள் என்பனவற்றை

நேரில் பார்ப்பவை நம்புவதற்குரியவை.

அமைத்தல்: உற்சவங்களின் போதும், முடிவிலும் மகேஸ்வரபூசை எனப்படும் அன்னதானம் வழங்கல்: வீடுகளில் நடைபெறுகின்ற சமய, சமூக வைபவங்களின்போது உணவளித்தல் என்பன சைவமரபு வளர்த்த நற்கருமங்கள் ஆகும். இப்பண்புகள் பேணி வளர்த்துத் தொடரப்பட வேண்டியவை. சர்வலோக நாயகியை அன்னபூரணி என்று அழைத்து வழிபடும் பெருமையும்: பெற்றதாய், அன்னம் அளித்துக் காப்பாற்றி வருவதால் அவளை அன்னை என்றழைக்கும் பாங்கும் சைவமரபிற்கே உள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூர் மக்களின் பசிப்பிணி போக்குவதற்குக் குன்றையூறிற் பெற்ற நென்மணிகளைத் திருவாரூருக்கு அனுப்பி வைக்க உதவுமாறு தோழமை நிலையில் திருக்கோளிலி எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். ஞானசம்பந்தரும், அப்பரும் பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசி போக்குதற்காகச் சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்றனர். அர்த்த சாமத்தில், அடைமழை நேரத்தில், வறுமை வாட்டிய நிலையிலும் உணவு கேட்டு வந்த சிவனடியாருக்கு அன்போடு அமுதூட்டியவர் இளையான்குடி மாறநாயனார். அப்பூதியடிகள் மடங்களும், தண்ணீப் பந்தல்களும் அமைத்துத் தொண்டு செய்தார். இவற்றையும் இவை போன்ற சம்பவங்களையும் சேக்கிழார் பெரிய புராணத்திலே சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பண்பு சைவமரபாக, சைவ நெறியாக, தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளது.

சென்ற நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில், பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசிப்பிணியைப் போக்குவதற்கு கஞ்சித்தொட்டிகளை ஊர்தோறும் அமைத்துத் தொண்டு புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பிடியரிசி வழங்குவதன்மூலம் இப்புண்ணிய கைங்கரியத்தில் ஒவ்வொரு வீட்டாரையும் ஈடுபடுத்திய பெருமை நாவலரையே சாரும். "யாவர்க்கு மாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்ற திருமூலர் வாக்கு இங்கு செயலாகின்றதைக் காண்கின்றோம். இதன்படி தினமும் உலையிலே போடப்படுகின்ற அரிசியில் ஒரு பிடி அரிசியை அள்ளி எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சேமித்து வருவர். இவ்வாறு ஒரு மாத காலம் சேர்த்த அரிசியை ஏழைகளின் பசியைப் போக்க வழங்குவர். இந்த மாதிரியாகப் பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பு பண்டைக்காலத்திலிருந்து நாவலர் காலம் வரை சைவமக்களிடையே சைவப் பாரம்பரியமாக வளர்ந்து வந்துள்ளது. ஆனால், தற்காலத்தில் இப்பண்பு அருகிவருவதை உணரக் கூடியதாக உள்ளது. இத்தகைய பசித்துயர் துடைக்கும் பண்பாட்டினைச் சைவமக்களாகிய நாம் நன்குணர்ந்து, அதனை மீளவும் வளர்க்க முயல்வோமாக. இதே

நிகழ்காலம் போல நல்ல நேரம் வேறு வாய்க்காது.

வேளை "உண்ணும் உணவை பழித்தலாகாது. இது விரதம் ஆகும்" "உணவை வீணாக எறியலாகாது" இது விரதம் என்னும் உபநிடதக் கூற்றுக்களையும் நாம் கவனிக்க வேண்டும். உயிரைக் காப்பாற்றும் உணவு மிக அருமையானது. மிக்க அருமையான உணவுப்பொருளை அலட்சியம் செய்வதோ வெறுப்பதோ ஒழுக்கம் அன்று என்பதையும் உணர்வோமாக.

## திருநீறு

ஏழை நெசவாளி ஒருவன், ஊருக்கு வந்த சாமியாரிடம், "சுலபமான உபதேசம் செய்யுங்கள்" என்று கேட்டான். சாமியார், புன்னகை புரிந்தார்.

"அப்பா! திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த பிறகுதான் ஆகாரம் சாப்பிடுவது என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொள்" என்று அருளினார். "அப்படியே என்றான் ஏழை!" அவனுடைய பக்கத்து வீடு ஒரு குயவனாருடையது. அந்தக் குயவனார், பரம சிவபக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக் கொண்டிருப்பார். அடிக்கடி அவனுடைய வீட்டுப்பக்கம் வருவார்.

திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பார்த்த பின்னரே, கூழானாலும் குடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டான் ஏழை. ஒருநாள் குயவனார் அவன் வீட்டுப்பக்கம் வரவில்லை. கடும் பசியால் துடித்தான், ஏழை.

"போய் அவர் வீட்டில்தான் பார்த்துவிட்டு வாருங்களேன்" என்றாள் அவன் மனைவி. "சரி" என்று அடுத்த வீட்டுக்கு ஓடினான். அந்தவேளை குயவனார் களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். ஒரே ஓட்டமாக ஏரிக்கரைக்கே ஓடினான்.

அங்கே ஒரு பெரிய பள்ளம். அதில் குயவனார் மண் வெட்டி எடுக்கும் போது இரண்டு தங்கக்குடங்கள் இருந்தன. யாராவது பார்த்துவிட்டால் துன்பமாயிற்றே என்று, மேலே நிமிர்ந்து பார்த்தார்.

அந்த நேரத்தில் ஏழை, "பார்த்து விட்டேன்!" என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம். அவன் பார்த்தது, அவரது விபூதியணிந்த முகத்தைத்தான். குயவனார் பதைத்துப் போனார். 'இவன் யாரிடமாவது சொல்லி விட்டால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகுமே!' என்று அஞ்சினார்.

பதட்டத்தோடு அவனை அழைத்த குயவர், "நீயும் ஏழை, நானும் ஏழை. ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக்கொள்வோம். இதை வெளிப்படுத்த வேண்டாம். இந்தா, ஒரு குடம், நீ கொண்டு போ" என்று கொடுத்து விட்டார்.

"திருநீறு பூசிய முகத்தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாகவே இந்த நலம் எய்தியதே. நாமே திருநீறு பூசி வழிபாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே" என நினைத்த நெசவாளி அன்று முதல், முறையே ஆசார அநுஷ்டானங்களை மேற்கொண்டு, திருநீறு பூசித் தெய்வ மணம் கமழச் சிறந்து விளங்கினான்.

*அறியாமல் இறை சிந்தனை கொண்டாலும்*
*அளப்பரிய நலன் உண்டு.* -வாரியார்-

வாழ்க்கையின் விதிமுறைகளே மதம்.

உ

தொடர்ச்சி..

# சிவபக்தியில் சிறப்புப் பெற்ற சிவனடியார் மூவர்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

## கண்ணப்ப நாயனார்

**வேட்**டை மேற்கொண்டு சென்ற திண்ணனார், பன்றி ஒன்றைத் துரத்திக்கொண்டு போகிறார். நாணனும் காடனும் அவருக்குத் துணையாகச் செல்கின்றனர்.

பன்றி அவர்களைக் காளத்தி மலைச்சாரல்வரை கொண்டுபோகிறது. அந்த அளவில் களைத்துச் சோர்ந்து போய்நின்ற பன்றியை வெட்டிக் கொன்ற திண்ணனார், பசிதாகத்தாற் சோர்வடைந்து, நாணனைப் பார்க்கிறார்.

பன்றியை வாட்டி உண்டு, நீர் அருந்த வேண்டும். காடனிடம் பன்றியை வாட்டும் பணியை ஒப்படைத்துவிட்டு நாணன் திண்ணனாரைப் பொன்முகலியாற்றங் கரைக்கு அழைத்துப் போகிறான்.

திருக்காளத்தி மலையருகே பொன்முகலியாறு பாய்கிறது, மலையிலே குடுமித்தேவர் என்னும் காளத்தியப்பர், கோயில் கொண்டுள்ளார். அங்கு சென்றாற் கும்பிடலாம் என்கிறான் நாணன்.

"இந்த மலையைக்கண்டு, இதை அணுக அணுக என் மேல் உள்ள பாரம் குறைகிறது போல் உணருகிறேன் இனி யாது நடக்குமோ அறியேன்" என்கிறார் திண்ணனார்.

அவ்வாறு கூறியவர், காளத்தி நாதனைக் கண்ட அளவிலேயே நெடுங்காலம் பிரிந்திருந்த குழந்தையைக் கண்ட தாயைப்போல, இறைவனைத் தழுவி, முத்தமிட்டு, குசலம் விசாரித்து வணங்குகிறார். இதனால் திண்ணனார் இறைவன்மேல் வைத்த அன்பு எப்படியானது என்பதை உணரலாம்.

'அன்புருவம்' ஆயினார் என்கிறார் சேக்கிழார் அடிகள். பிறவியிலேயே திண்ணனார் என்று பெயர் பெற்ற கண்ணப்பர், இரும்பு உடலும் இறுகிய மனமுங் கொண்டவர். குடுமித்தேவரைக் கண்டளவில் அன்புருவம் ஆயினார் என்றால் அவரது அன்பு நிலையை என்னென்றியம்புவது! அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு. அன்புருவான திண்ணனார் சிவமாக சிவமயமாக மாறிவிடுகின்றார்.

இதுவரை காலமும் திண்ணனார், இறைவழிபாட்டில் முனைப்பாக இருந்ததில்லை.

ஆயினும் இவரது தந்தை, தாயாராகிய நாகனும் தத்தையும் குறிஞ்சிக் கடவுளாகிய முருக னிடத்தில் மிகுந்த பக்தியுடைய வர்களாயிருக்கின்றனர். முருகன்

அருளால் உதித்த திண்ணனார் இடத்தில் சிவனன்பு இருப்பதில் வியப்பில்லையன்றோ!.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" (73)

காளத்தியப்பரை வணங்கும் போது அவர்மேல் நீரை ஊற்றிப் பூக்கள் சார்த்தியிருப்பதைக்கண்டு, இறைவனை யாரோ அசுத்தப்படுத்தியிருப்பதாகவே எண்ணுகிறார் திண்ணனார்.

குடுமித்தேவராகிய காளத்தி நாதருக்கு இதுநாள் வரை பூசனை புரிபவர் சிவகோசரியார்.

இவர், அறிவு, புலனடக்கம், தவம், சிவபக்தி எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற அந்தணர். சைவாகம விதிப்படி அர்ச்சிப்பவர். நாணன், தான் அறிந்த இந்த விபரத்தைத் திண்ணனார் அறியும்படி சொல்கிறான்.

சிவகோசரியாரின் பூசை முறை திண்ணனாருக்கு ஏற்புடையதாயிருக்கவில்லை.

அதேநேரம், திண்ணனார் நெருப்பில் வாட்டிய பன்றி இறைச்சியைத் தின்றுபார்த்துப் படைக்கிறார். வாயில் மொண்டுவந்த நீரால் மஞ்சனமாட்டுகிறார். காதிற் சொறுகி வந்த பூக்களால் அர்ச்சிக்கிறார். தான் படைத்த அமுதை உண்ணும்படி இறைவனை இறைஞ்சி நிற்கிறார். இரவு முழுவதும் இறைவனுக்குக் காவல் புரிகின்றார்.

மாலையில் திண்ணனார் செய்யும் இந்தப் பூசைப் பொருள்கள் காலையில் வரும் சிவகோசரியாருக்கு அசுத்தங்களாக இருக்கின்றன. ஆயினும் திண்ணனாரின் அன்புநிலை அளப்பரியதாகக் காட்டுகின்றார் சேக்கிழார்.

சார்வரும் தவங்கள்செய்தும் முனிவரும் அமரர்தாமும்
கார்வரை அடவிசேர்ந்தும் காணுதற்கு அரியார்தம்மை
ஆர்வம் முன்பெருக ஆரா அன்பினிற் கண்டுகொண்டே
நேர் பெற நோக்கி நின்றார் நீள்இருள் நீங்கநின்றார்.

என்பது சேக்கிழார் வாக்கு.

மாலைப்பூசை முடித்து, இரவு இறைவனுக்குக் காவலாக இருள் நீங்கும் வரை நின்றார் என்பதில், மரண இருள் நீங்கும் வரை நின்றார் எனப் பொருள் கொள்ள வைக்கிறார் சேக்கிழார்.

இதற்கிடையில், திண்ணனாரின் இந்தக் கோலங்கண்டு, இவருக்குப் பித்துப்பிடித்ததோ என எண்ணித் தாய், தந்தையருக்குச் சென்று முறையிடுகின்றனர் நாணனும், காடனும்.

தாய் - தந்தையரும் வந்து பார்க்கின்றனர். அவர்களும் திண்ணனாரின் உண்மைநிலையை விளங்கிக் கொள்ளவில்லை. அவரை விட்டு நீங்கிச் செல்கின்றனர்.

இப்படியே ஐந்து நாட்கள் கழிகின்றன. சிவகோசரியாரும்

திண்ணனாரும் ஒருவரையொருவர் விளங்கிக்கொள்ளவில்லை. சிவகோ சரியார் மிக்க கவலையோடு ஐந்தாம் நாள் பகற்பூசையை முடித்துக் கொண்டு போகிறார். ஒருநாள் இருநாள் அல்ல, ஐந்து நாட்களாக அவருடைய கோயில் அசுத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. இதற் கெல்லாம் பிராயச்சித்தஞ் செய்வ தென்பது இலகுவான காரியமா? மனக்குழப்பத்தோடு போகிறார் சிவ கோசரியார்.

மெய்யடியார்கள்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,
கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்குவார் (கள்)

ஒவ்வொருவருடைய வினைத் திறமையையும் மேலதிகாரிகள் ஏனையோருக்கு உணர்த்தி, அவர்களையும் ஊக்குவிப்பதுதானே அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவக்கூடியது.

திண்ணனாரைப்பற்றி, அவரின் அன்புநிலைபற்றி உலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அருள் நோக்கங்கொண்ட இறைவன், சிவகோ சரியாருக்குச் சிறிது சஞ்சலத்தையுங் கொடுத்திருக்கிறார் போலும்!.

இது இறைவனின் திருவிளை யாடல் என்று கொள்ள வேண்டும். ஐந்தாம்நாள் இரவு, சிவகோசரி யாருக்கு இறைவன் கனவிலே காட்சி கொடுக்கிறார்.

"திண்ணனார், தமது வாயிலே மொண்டு வரும் நீரை என்மேல் உமிழ்ந்து அபிடேகஞ்செய்கிறான். அவனுடைய அன்புமயமான உடம்பின் வாயாகிய கொள் கலனிலிருந்து அந்நீர் ஒழுகுகின்ற படியால் அது கங்கை முதலான தீர்த்தங்களிலும் சிறந்ததாகிறது: பரிசுத்தமானது. தலையிலே சொருகி வந்து நமக்குச்சூட்டும் பூக்கள், பிரமா விஷ்ணு முதலியோர் நமக்குச்சூட்டும் பூக்களிற் சிறந்ததாகிறது. அவன் நமக்குப் படைக்கின்ற மாமிசம் பதமாக வெந்து இருக்கிறதா எனச்சுவைத்துப்பார்ப்பது அன்பின் வசத்தன் ஆனபடியாற்றான் இது வேத விதிப்படி யாகம் செய்து சமர்ப்பிக்கின்ற அவியிலும் இனியதாக இருக்கின்றது. நமக்கு யாதொரு தீங்கும் நிகழ்ந்து விடக்கூடாது என்பதனாலே அவன் இரவில் விழித்து இருக்கிறான் என்பது தெரியுமா? அவன் வாயிலிருந்து வெளிப்படும் சொற்கள் வேத மந்திரங்களிலும் பார்க்கத், தோத்திரப் பாக்களிலும் பார்க்க இன்பம் பயப்பன. இவ்விதமாக அன்பின் மயமான அவனது செய்கைகளை உனக்குக் காட்டுவோம்: நாளைக்

காலையில் வந்து ஒளித்திருந்து பார்."

இந்தக் கனவைக்கேட்ட சிவகோசரியாருக்கு, திண்ணனார் மீது கொண்ட தவறான எண்ணம் நீங்குகிறது.

ஆறாம் நாட்காலையில் ஆலயத்தின் ஒரு பக்கத்தில் ஒளித்து இருந்து கவனிக்கிறார்.

வழக்கம் போல, இறைச்சி, நீர், பூக்கள் என்பவற்றோடு அம்பும் வில்லுந்தாங்கித் திண்ணனார் வருகிறார். வழியில் ஏதோ தீய சகுனங்களைக் கண்டதால் அவரது நடையில் வேகம் இருக்கிறது.

காளத்திநாதரை அவர் அண மிக்கவும், இறைவனது வலக்கண்ணிலிருந்து இரத்தம் பாயவும் சரியாக இருக்கிறது.

இந்த இரத்தப் பெருக்கிற்குப் பகைவர் காரணமாக இருக்கலாமோ? இல்லை. அங்குமிங்கும் ஓடிப்பச்சிலை மருந்து செய்து பார்க்கிறார். பலனில்லை. "ஊனுக்கு ஊன்" என்பது ஞாபகம்வரவே, தமது ஒரு கண்ணை அம்பினால் தோண்டி எடுத்து, அந்த இரத்தம் வடிந்த கண்ணுக்கு அப்புகின்றார். இரத்தப் பெருக்கு நின்றுவிடுகிறது.

தனது அன்பிற்குரிய இறைவனின் கண் குணமடைந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துப் பரவசமாகிறார்.

ஆனால், அடுத்த விநாடி மற்றைக் கண்ணிலிருந்து இரத்தம் பெருகுகிறதே!

அப்போது அவருக்கு வைத்தியம் தெரிந்ததுதானே. கவலைப்படாமல் அம்பை எடுத்து மற்றைக்கண்ணைத் தோண்டப் போகிறார்.

மற்றைக் கண்ணும் தோண்டப் பெற்றதும் தனது பார்க்குந்திறன் இல்லாமற் போகும் என்பதால், இறைவனின் இடக்கண் பக்கத்தில் செருப்புக்காலை அடையாளமாக வைக்கிறார்.

இனிமேலும் திண்ணனாரின் அன்பின் திண்மையைச் சோதிக்க இறைவனுக்கே மனம் வரவில்லை போலும்!.

"நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப என் அன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று தடுத்தாட் கொள்கிறார் காளத்திநாதர்.

இதுவரை அங்கு மறைந் திருந்து அவதானித்த சிவகோசரியார், பிரத்தியட்சமாகி, இறைவன் திருவருளையும் கண்ணப்ப நாயனாரின் அன்பின் ஆழத்தையும் வியந்து வணங்கி நிற்கிறார்.

பிரமாதி தேவர்களும் கண்ணப்பரை ஆசீர்வதித்து பூமாரி பொழிந்தார்கள்.

"கண்ணப்பா, நீ என்றும் என் வலப்பக்கத்தில் நில்" என்று அணைத்துக் கொள்கிறார்.

(தொடரும்...

உ

# சேவடி

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முருகப்பெருமான் ஒளிமயமானவர்:

தமது சரணாலயம் புகுந்தவரைத் தாங்கும் தாளினர்:
அழித்தற்குரியாரை அழித்த திருக்கரத்தினர்:
தெய்வயானை அம்மையார் திருக்கணவர்:
குளிர்ந்த மாலையசையும் மார்பினர்:
செங்காந்தள் கண்ணி சூடிய திருமுடியினர்:
முருகப்பெருமான் செவ்வேலினர்.

என்று மருவும் அடியார் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமானை மனக்கண் முன்நிறுத்தினார் சீரடியார். இது திருப்பரங்குன்றத்தினை நினைக்கச் செய்வது. முதலாவது முருகாற்றுப் படையும் இதுவேயாகும்.

முருகப்பெருமானுடைய செம்மையான திருவடியைச் சேவடி என அழைப்பர்.

**சேவடி:-** சேவடி - திருவடி. "திருவடி என்பது அறிதற்கரிய ஒன்றற்குக் கூறப்பட்ட குறிப்புமொழி என்க. இவ்வியல்பைச் சமயநெறி நின்றார் பொருள் செய்து கோடலன்றி ஏனையோர் உணர்தலும் உணர்த்தலும் அரிதென்க" என்பர் பண்டிதமணி க.சு. நவநீதி கிருஷ்ண பாரதியார் அவர்கள்.

நச்சினார்க்கியருடைய உரைவிளக்கம் பின்வருமாறு அமையும். "திருவடியே வீடாயிருக்குமென்றார், அது தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி (திருவா திருவம்மானை 6) என்பதனாலும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானுணர்க"

அருளாளர்கள் திருவடியின் அருமையை உணர்த்தும் முறையினை ஒரு சிறிது ஓர்வோம்.

"திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானனஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே (1598)
திருவடி யேசிவ மாவது: தேரில்
திருவடி யேசிவ லோகம்: சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது: செப்பில்,
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. (138)

என்பது திருமந்திரம்.

குன்றம் எறிந்து, குரை கடலிற் சூர்தடிந்த குமரப்பெருமானுடைய குரை கழலை நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், இளங்குமரன் றன்னைப் பெற்றிமையவர் தம்பகை யெறிவித்த இறைவனுடைய திருவடிச்சிறப்பைப் போற்றும் சிறப்புச் செம்பொருள் ஆனது.

"கார்வணன், நான்முகன் காணு தற்கொணாச் சீர்வணச் சேவடி
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்:
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்:
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்:
கழலடிக்கே யுருகி மலர்கொடு வந்துமை யேத்துதும்:
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றருனடி காண்போம்:
விரைகமழ் மாமலர்தூவி விரிசடையானடி காண்போம்:
இனமல ரேய்ந்தனதூவி யெம்பெருமானடி சேர்வோம்:
தளையவிழ் மாமலர்தூவித் தலைவனதாளினை சார்வோம்:
தொண்டர்கள் மாமலர் தூவத் தோன்றி நின்றானடி சேர்வோம்.

திருநாவுக்கரசு நாயனார்... நஞ் செந்தின்மேய வள்ளி மணாளற்குத் தாதை தாள்களை ஏத்திய வண்ணங் காண்போம்.

"அழகு வரையலாகாத அருட் சேவடி. "அறிந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் அடி. "உரையால் உணரப்படாத அடி. "நறுமலராய் நாறு மலர்ச் சேவடி. "மறுமதியை மாசு கழுவும் அடி." மந்திரமும் தந்திரமும் ஆயவடி. "அடியார்கட் காரமுத மாயவடி. "பற்றற்றார் பற்றும் பவளவடி. "மணியடி. "பொன்னடி. "மாண்பாமடி. "மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி. "சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன். "பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன். "பொருளாவா யுன்னடிக்கே போதுகின்றேன். "போறாரே யுன்னடிக்கே போதுகின்றேன் "புரிசடையாய் யுன்னடிக்கே போதுகின்றேன். "பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன். "பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன், பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன். "பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன்.

சுந்தரமூர்த்தி நாயனார் தரும் திருவடி ஞானம் இது,

"சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்.
"செய்கை கண்டு நின்றிருவடி யடைந்தேன்.
"பூதவாளி நின்பொன்னடி யடைந்தேன்.
"கொள்கை கண்டு நின்குரைகழ லடைந்தேன்.
"சீலங்கண்டு நின்றிருவடி யடைந்தேன்.
"திகைப்பொன்றின்றி நின்றிருவடி அடைந்தேன்.
"தீர்த்தனே நின்தன் திருவடி அடைந்தேன்.
"தேவதேவ நின்றிருவடி அடைந்தேன்.
"செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்.

நமச்சிவாய வாஅழ்க' எனத் திருவாசகம் எடுக்கும் மணிவாசகப்பெருமான் உணர்த்தும் திருவடி ஞானம் காண்போம்.

"நாதன் தாள் வாழ்க "என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.
"குருமணி தன் தாள் வாழ்க "இறைவன் அடி வாழ்க.
"வேந்தன் அடி வெல்க "பிஞ்ஞகன் பெய்கழல்கள் வெல்க.
"பூங்கழல்கள் வெல்க. "கோன் கழல்கள் வெல்க.
"சீரோன் கழல் வெல்க. "ஈசன் அடி போற்றி.
"சிவன் சேவடி போற்றி. "நிமலன் அடி போற்றி.
"மன்னன் அடி போற்றி. "நம் தேவன் அடி போற்றி.
"பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்.
"ஆதியாம் பாதமலர், "அந்தமாம் செந்தளிர்கள்.
"எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்.
"எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்.
"எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்.
"மால் நான்முகனும் காணாத புண்டரிகம்.
"யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்

மேலே கண்டவற்றால் சேவடியே தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும், குவிவிற்கும், விரிவிற்கும் மூலம் எனலாம். அவ்வாறான திருவடிகள் அரிது அரிது! காண்டற்கு அரிது!!

இவையாவும் சிவபெருமானுடைய சேவடிச்சிறப்பு. அவையாவும் முருகப்பெருமானுடைய சேவடிக்குப் பொருந்துவதாமோ எனின்? பொருந்தும். எவ்வாறு என்பதை எடுத்துரைப்போம்.

## *உள்ளத் தூய்மை*

இன்பமும் துன்பமும் உனது மனத்தினின்றும் உண்டாகின்றன. மனமே பந்தத்திற்கும் முக்திக்குங் காரணமாகின்றது. தீய மனம் நரகத்தைத் தருகின்றது. நன்மனம் பரகதியைத் தருகின்றது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார் மனத்துக்கண் மாசிலனாதலே எல்லா அறங்களுமாய் ஆதலினால் உன் மனம் பளிங்கு போல் இருக்கட்டும்.

- கிருபானந்த வாரியார்-

எதையும் அரைகுறையாக செய்யாதீர்கள்.

உ

சந்நிதியான்
(தொடர்ச்சி..

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## (மகாபாரதத்திலிருந்து)

## பீஷ்மரின் உபதேசம்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்.

யுதிஷ்டிரர் கேட்டுக்கொண்டதற்கமையப் பிதாமகர் பீஷ்மர் மேலும் அரச தர்மத்தைப் பற்றி எடுத்துரைத்தார். “மைந்த மன்னர்கள் செம்மையாக அரசோச்சிவரின் குடிமக்கள் பயமின்றி இன்பமாக வாழ்வார்கள். காவல் ஏதுமற்றுக் கதவைத் தாழ்ப்பாள் போடாது நிற்சிந்தையாகத் தூங்கக் கூடியவகையின் அரசனது ஆட்சியின் காவல் அமைய வேண்டும். ஆண்களின் துணையின்றி மகளிர் தனியே தைரியமாக உலாவிவரும் நிலை இருக்க வேண்டும். அரசனின் கட்டுக்கோப்பான ஆட்சி முறையால் அனைவரும் ஒழுக்க சீலர்களாக வாழும் நிலை ஏற்படும். மனித வடிவில் நடமாடும் தெய்வமென மன்னனை மக்கள் கருதும்படி மன்னன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அக்கினி, ஆதித்தன், மிருத்யு, குபேரன், எமன் ஆகிய ஐந்து தேவதைகளின் அம்சத்தையுடையவன் மன்னன். பாவம் புரிந்தோரைத் தனது வல்லமையால் அக்கினியாகிக் கொளுத்துகிறான். குடிமக்கள் அனைவரையும் கண்காணித்துப் பாதுகாத்துக் கொள்வதால் ஆதித்தன் போல் விளங்குகிறான். தீய நடத்தையுள்ள மனிதர்களைத் தண்டனை வழங்கி அழிப்பதலால் மிருத்டிவாகிறான். அதர்ம வழியில் செல்பவர்களைத் தண்டிப்பதால் யமன் ஆகிறான். மக்களுக்கு உதவிகள் செய்வதனால் குபேரன் ஆகிறான்.

இதன் மேலும் மன்னர்களின் தன்மைகளைப்பற்றி எடுத்துரைத்தார். மன்னன் ஒருவன் முதலில் தன்னையே தான் வெற்றி கொள்ள வேண்டும். ஐம்புலன்களையும் அடக்கித் தன் கட்டுப்பாட்டில்க் கொண்டு வந்து ஆசைகளை வென்ற மன்னனே பகைவர்களை வெல்ல முடியும். தன்னை வெற்றி கொள்ளாத மன்னனால் பகைவர்களை ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது. அடுத்து மன்னன் எவ்விடத்திலும் தனது நம்பிக்கைக்குரிய உளவாளிகளை அமர்த்தி இருத்தல் வேண்டும். அறிவாற்றல் உடையவனாகவும், பசி, தாகம், களைப்பு இவற்றைத் தாங்கும் மனோதிடம் உடையவராயும், எவரும் எளிதில்க் கவனித்துக் கண்காணிக்கும் உருவ அமைப்பற்றவராகவும், செவிடன், அசடன், குருடன் போன்று தோற்றம் அளிப்பவர்களாகவும்

அவசியத் தேவைக்கு விதிமுறை கிடையாது.

ஒற்றர்கள் அமைந்திருத்தல் நன்மை பயக்கும். உளவாளிகள், மக்கள் கூடும் பொதுவிடங்கள், கடைகள், விளையாட்டுத்திடல்கள், பள்ளிக் கூடங்கள், பொதுமண்டபங்கள், நீதி மன்றம், சிப்பந்திகள் வாழும் வாழிடங்கள், வணிகர்கள் வாழும் பெருந்தெருக்கள் போன்ற இடங்களில் எல்லாம் அமர்த்தப்பட்டு இருக்க வேண்டும். இவ்விடங்களிலேதான் அயல்நாட்டு ஒற்றர்கள் ஊடுருவும் நிலைமைகள் இருப்பதனால் இவ்விடங்களில் எல்லாம் மன்னன் தனது உளவாளிகளை நியமித்து, அயல் நாட்டு ஒற்றர்களின் ஊடுருவலைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் மன்னன் தனது ஆட்சியில் ஏழுவிதமான அங்கங் களைக் கருத்தோடு கவனித்துக் கொள்ள வேண்டும். தான், அமைச்சர் கள், பொக்கிஷம், ஏவலாளர்கள், நண்பர்கள், நகரம், கிராமம் ஆகிய ஏழு உறுப்புக் களையும் அரசன் தனது ஆட்சியில் திறமையாக கவனித்துச் செயலாற்ற வேண்டும். அடுத்து ராஜ்யத்தின் குறைநிறைகள், தேவைகள், தொடர் பாடல்கள் என்பனவற்றை மன்னன் அவ்வப்போது அறிந்து கொள்ள வேண்டும். தனது நாட்டில் கிடைக்காத வளங்களைப் பெற்று அவற்றைப் பேணிக்காப்பதில் அரசு கவனமாக இருக்கவேண்டும். மன்னன் தனது பலத்தினாலும், தானம் வழங்குதலினாலும் அன்புடை மையான ஆட்சி முறையினாலும் எல்லோரையும் தன்வசம் வசப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

காலமாற்றத்தினாலும், தேச வேறுபாடுகளினாலும் சில தருமநெறி முறைகள் மாற்றமடைந்து காணப்படும். அவற்றை நுட்பமாக அறிந்து வேறுபாடுகளுக்கேற்ப நடந்து கொள்ளும் அறிவாற்றல் உடையவனாக மன்னன் விளங்க வேண்டும். சுமை தூக்காத காளையும், பால் தரமுடியாத பசுவும், மக்களை ஈன்றெடுக்க முடியாத மகளிரும் இருந்தும் இல்லாமை போல் பாதுகாக்க முடியாத மன்னன் இருப்பதும் இல்லாததும் ஒன்றே. குடிமக்களை அன்புடன் பராமரிப் பதால் தந்தையாகவும், அவர்களைப் பாதுகாப்பதால் தாயாகவும், தரும நெறிகளைக் கைக்கொண்டொழுகி உபதேசிப்பதால் குருவாகவும் மன்னன் விளங்குகிறான். அன்றியும் மன்னனது செங்கோல் தாழுமாயின் இயற்கையின் சமநிலைகூட மாறுபடும். எனவே அரசர்களின் தர்மநெறி மிக நுட்பமானது இவைகளை நீ நன்கு புரிந்து கொள் வாயாக" என்று அதர்மத்தையும் மன்னர்களின் நிலையையும் தெளிவுபட எடுத்துரைத்தார் பீஷ்மர். பீஷ்மரின் உரைகளை மிக்க கவனத்துடன் செவிமடுத்திருந்த பாண்டவர்கள் மாலைக்காலம் நெருங்கியமையால் மறுநாள் வருவ தாகக்கூறி பிதாமகரிடம் விடை கொண்டனர்.

மறுநாட்காலை பீஷ்மரை அணுகிய பாண்டவர்கள் அவரை

வணங்கி அவரருகே அமர்ந்தனர். யுதிஷ்டிரர் பிதாமகரை நோக்கி "பிதாமகரே! ஞானம் தானம் ஆகிய இரண்டினுள் எது சிறந்தது?" என வினாவலானார். யுதிஷ்டிரரின் வினாவிற்கு விடையாக "யுதிஷ்டிரா, வேதம் விதித்தவை ஒருபோதும் பொய்யாகாது, வேதவிதிகளின்படி, பிறர்க்கு இன்னா செய்யாமை, சத்தியம், கொடை ஆகிய இம்மூன்றுமே மனிதனை மேன்மை யடையச் செய்கிறது. இவற்றையே ரிஷிகளும் முன்பு கடைப்பிடித்து ஒழுகி வந்துள்ளனர். தாகத்தினால் வருந்தும் ஒருவனுக்கு அன்புடன் அளிக்கும் பருகக்கூடிய நீரானது அளவில் சிறிதாக இருப்பினும் பெரும் பலனைத் தரவல்லது. எல்லா விதமான புண்ணியப் பேறுகளிலும் கொடையினால் வரும் புண்ணியம் பன்மடங்கானது. கொடை வள்ளல் களை உயிரையும் வழங்கக் கூடிய வர்கள் என்றே கூறலாம். அறம் என்பது தர்ம வான்களிடம் வேருன்றி உள்ளது. வேதங்களைக் காலம் தவறாது ஓதுவதும், ஐம்புலன்களை அடக்கித் தவம் செய்வதும் போலவே அறமும் மேலானதாகக் கருதப்படுகிறது. அறஞ்செய்யும் மனநிலையுடையவர்கள் கருமித்தனம் செய்யாது, இனசன பற்றுக்களுடனும் அயலவர் நண்பர்களுடனும் சேர்ந்து வழங்கி இன்பமடைவார்கள். வேத யக்ஞம் போன்று தர்மம் மேலானது என்றமையால் தருமனே யாசிப்பவர் கட்குத் தாராளமாகக் கொடு. அதிர்ஷ்டம் இல்லாமையினால் செல்வம் குறைவுபடுமேயன்றி தானதர்மம் செய்வதனால்ச் செல்வம் ஒருபோதும் அழிவடைவதில்லை. தர்மஞ்செய்வதில் மனநாட்டம் உடையவனாய் நீ வாழ்ந்தால் ஞானிகளும் யோகிகளும் உனக்கு மேலாகார்" என்று தருமத்தின் மேன்மையை எடுத்துரைத்தார். இதன்பின்பு யுதிஷ்டிரர் மாதரின் தன்மையைப்பற்றிக் கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தருமரின் கேள்வியைச் செவிமடுத்த பிதாமகர் "யுதிஷ்டிரா, கேகய நாட்டு மன்னன் மகள் சுமனை என்பாள் தேவலோகம் சென்று அங்கிருந்த சாண்டவி எனும் பெண்ணுடன் உரையாடி மாதரின் நல் ஒழுக்கத்தைப்பற்றி அறிந்தாள். அதனை உனக்குக் கூறுகிறேன் கேட்பாயாக.

சுமனை சாண்டவியை நோக்கி "பெண்களில் சிறந்து விளங்கும் நீ எத்தகைய சீலத்தினால் பாவங்கள் ஏதும் அற்றவளாய்த் தேவலோகம் வந்தாய்? உன் உடல் தீப்பிழம்பு போல் ஒளிர்கிறதே! என்ன காரணம்? தவம், தானம், நோன்பு முதலிய வற்றால் இப்பெரும் பேற்றை அடைந்திருக்க முடியாது என்பது தெளிவாகிறது உனது வரலாற்றைக் கூறுவாயாக" என வினாவினாள்.

இன்றைய தொடரில் வரும் அரசதர்மம், தானத்தின் சிறப்பு என்பன எல்லாம் நாம் உளம் கொள்ள வேண்டிய முக்கிய கருத்துக்களாகும். தாகத்துக்கு நீரும், பசிக்கு உணவும்,

ஒதுங்கிக்கொள்ள உறைவிடமும் அளிப்பதே சிறந்த தானமாகிறது. சத்தியம், பிறர்க்கு இன்னா செய்யாமை என்பன எல்லாம் எந்த அளவில் நம் வாழ்க்கையில் அமைந்திருக்கிறது? என்ற கேள்வியை நாம் எம்முள் கேட்டுக்கொண்டோமானால் எமது வாழ்வு வளம்பெறும். மன்னர்களின் செங்கோல் மாறுதல் அடையும்போது இயற்கை சமநிலை கெடும் என்பது நாம் கண்கூடு கண்ட நிகழ்ச்சி. தானத்தின் மேன்மையையும், சத்தியத்தின் பொறுமையையும் எடுத்துரைக்காத நீதிநூல்களே இல்லை. ஆனால் நடைமுறை வாழ்வில் அவை இல்லையே! ஏன்? இவற்றை நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதே எமது பெருவிருப்பாகும்.

(தொடரும்...

## பாதுகை

ராமர், வனவாசம் செய்தபோது, பரதனும் சத்ருகனும் அவரது பாதுகையை 14 ஆண்டுகாலம் பூஜித்தனர். இதற்கு ஒரு காரணம் உண்டு. வைகுண்டத்தில் ஒரு நாள், திருமால் வழக்கத்துக்கு மாறாகப் பாதுகையைப் பள்ளியறைக்குள் விடுத்துப் பாம்பணையில் படுத்தார். பெருமானுடைய திருமுடிக்குச் சீற்றம் உண்டாயிற்று. முடி, "ஏ, பாதுகையே! உனக்கு அறிவிருக்கின்றதா? கண்ட இடமெல்லாம் மிதிக்கின்ற நீ, படுக்கையறைக்குள் வரலாமா? போ, வெளியே" என்றது. பாதுகை, "முடியே! நானே வரவில்லை. பகவானுடைய திருவடிகள் என்னை உள்ளே விட்டது. வீணாக என் மீது ஏன் கோபிக்கின்றாய்" என்றது. "பாதுகையே! அதிகம் பேசாதே. நான் பெருமானுடைய தலைக்குமேல் இருக்கும் தகுதியுடையவன். என்னுடன் பேசவும் உனக்கு யோக்கியதை கிடையாது. ஆதலினால் சீக்கிரம் போ, போ," என்றது. "முடியே! ஏன் வீண் பெருமை பேசுகின்றாய்? ஐயன் பாதத்தை நம்பினோர் நலம் பெறுவர். அடியார்கள் அனைவரும் அடியைத்தானே விரும்புகின்றார்கள். எனவே, என்னை இகழாதே!" சங்கும் சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து, "ஏ செருப்பே! உனக்கென்ன அதிகம் வாய்? உன்னை, நசுக்கி எறிவோம்... வாயை மூடிக்கொண்டு வெளியே போ" என்றன.பாதுகை,நாராயணரைப் பார்த்து, "கருணைக்கடலே! நீ என்னை உள்ளே விடுத்து இவர்களைக்கொண்டு இகழச்செய்வது முறையா" என்று முறையிட்டது. திருமால், "பாதுகையே! நீ வருந்தற்க" என்று கூறிவிட்டுப் பின்னர் முடியைப்பார்த்து, "முடியே! நீ தற்பெருமை பேசிப் பாதுகையை நிந்தித்தபடியால், அடுத்து வரும் ராமாவதாரத்தில் பதினான்கு வருடங்கள் இப்பாதுகையின் மீது இருக்கக்கடவது: சங்கே! சக்கரமே! நீவிர் பாதுகையை இகழ்ந்த படியால், ராமாவதாரத்தில் பரதனாகவும், சத்ருகனனாகவும் பிறந்து, இப்பாதுகையைப் பதினான்கு ஆண்டுகள் வழிபடக்கடவது" என்றார். அப்படியே நிகழ்ந்தது.

**எளியோரை எள்ளாமை வேண்டும்**

ராமகிருஸ்ணா்.

பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

தாம் ஆட்கொண்டபோது பெற்ற அனுபவத்தை தேவாரம் பாடிய மூவரும் ஆங்காங்கே பாடியுள்ள போதிலும் மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்திலே அதிகமான பாடல்களில் பாடியுள்ளதைக் காணலாம்.

அந்த அனுபவத்தை திருவாசகத்திலே அவர் இருவகையாகப் புலப்படுத்தியுள்ளாரென்று கூறலாம்.

இதற்கு முந்திய கட்டுரையில் அவர் போற்றித்திருவகவலில் பாடியுள்ளதைப் பார்த்தோம். 'எனது அனுபவம் இது' என்று அப்பாடலில் அவர் நேரிடையாகக் கூறவில்லை. ஆனால் அவரது அனுபவமே அப்பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது.

பல பாடல்களில் அவர் "இது எனது அனுபவம்" என வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்றை இங்கு பார்ப்போம். இப்பாடல் திருத்தெள்ளேணத்தில் உள்ளது.

சிறுபிள்ளை ஓலையால் செய்த காற்றாடிகளை வைத்து விளையாடுவதை நாம் கண்டிருக்கிறோம். பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், அறம், மறம் ஆகியவை இந்தக் காற்றாடியை ஒத்தவை. இவை மாறிமாறிச் சுற்றி வருபவை. பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் என்பனவற்றை எண்ணும் போதே எமக்கு அச்சமேற்படுகிறது. இவற்றினாலேற்படும் அச்சத்தைப் போக்கி இறைவன் திருவாதவூரடிகளை ஆட்கொண்டான். மற்றொரு வகையாகக் கூறினால் இறைவன் அவரை ஆட்கொண்டதனால் அவருக்கு இந்தப்பெரும் அச்சம் இல்லாதுபோய்விட்டது.

மறதி எல்லோருக்குமே கஷ்டந்தரும். மறதியின் காரணமாக மாமேதைகளே கஷ்டப்பட்டிருக்கின்றார்கள். மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதனால் மறதியிலும் இறைவனை மறவாத நிலை கிட்டுகின்றது. மாணிக்கவாசகப்பெருமான்

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பெனும்
அறம்பாவ மென்றிரண் டச்சந்தவிர்த் தென்னை ஆண்டு கொண்டான்
மருந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டோமோ

என்று தான் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தைப் பாடியுள்ளார்.

இறைவன் தனது கழல்களை மாணிக்கவாசகப் பெருமான் மறந்துங்கூட மறவாமலிருக்கும்வண்ணம் நல்கியுள்ளார். அவர் மறந்தும் இறைவனது பாதங்களை மறக்க மாட்டார். அந்த நிலை எமக்குக் கிட்டாது. நாம் தேவை

ஏற்படும் போதுதான் இறைவனை நினைப்போம். ஏனைய பொழுதுகளில் மறந்து விடுவோம். இறைவனை இடையறாது சிந்திக்க அவனருள் வேண்டும். இறைவன் ஆட்கொண்ட போது அந்த நிலையையும் அவருக்கு நல்கினான். அதனை "மறந்தேயும் மறவாவண்ணம்" என்று பாடியுள்ளது நயக்கத்தக்கது.

மணிவாசகரின் அச்சத்தைப் போக்கி ஈசன் ஆட்கொண்டு தன் கழல்களையே நினைத்து வாழும் நிலையையும் அவருக்கு நல்கி யுள்ளார்.


## ஞானச்சுடர் வாசகர் போட்டி விடைகள்

1) மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்கள்
2) சூரபத்மன்
3) பாணபத்திரனுக்கு
4) நாராயணாஸ்திரம்
5) உருத்திரர் பதினொருவரையும் சக்தியையும்
6) நெடுமால்
7) திருப்பறியலூர்
8) திருவண்ணாமலை
9) குகன்
10) மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்
11) சூடுபட வேண்டும்
12) சிவபரம்பொருள்
13) திரு. நாகலிங்கம் திரு. சிவகுமார் ஆகியோருக்கு
14) சரவணப் பொய்கை
15) மனிதரில் தேவர், மனிதரில் மனிதர், மனிதரில் விலங்கு
16) ஏவாமலே செய்வார்க்கு
17) கார்த்திகை மாதச் சுக்கில பக்கத் துவாதசித் திதி
18) ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்
19) தன் புகழை வெளியே தெரியாமல் மறைத்து வாழ்தல்
20) அன்பர் சின்னராசா
21) ஆண்டாள்
22) பாவ, புண்ணியங்கள்
23) பதஞ்சலி முனிவர்
24) வியாழ பகவான்
25) திருக்கோவிலில் இறைவனை வழிபடுதற்கு

அறிவு தெளிவு பெற வைக்கின்றது.

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஆலயம் என்பது ஆத்மீக ஈடேற்றத்திற்கான ஒரு இடம். அந்த வகையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் ஆத்மீக ஈடேற்றத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு புனிதமான தலம் என்பதனை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தைப் பொறுத்தவரை ஆலயமும், அதன் சூழலும் ஆத்மீக ஈடேற்றத்திற்கு மட்டுமே உரிய ஒரு இடமாக அதனை மட்டுப்படுத்த முடியாது. இங்கே ஆத்மீக விடயத்திற்கு அப்பாலும் பரந்து விரிந்த பல்வேறு பட்ட விடயங்கள் தொடர்பு படுகின்றன. ஆத்மீக விடயங் களுக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை யின் பல்வேறுபட்ட அம்சங்களுக் காகவும் சந்நிதியில் மக்கள் ஒன்று கூடுகின்றனர்.

அவ்வாறான அந்த வாழ்வியல் அம்சங்கள் பற்றியோ

அல்லது வாழ்வியல் அம்சங்களுடன் சந்நிதியான் எந்த வகையில் தொடர்புபட்டுள்ளான் என்பது பற்றியோ நிறைவான ஒரு விளக்கத்தை கூறுவது மிகவும் கடினமான விடயம். ஆனாலும் ஒருவருடைய வாழ்வியல் அம்சங்கள் எவை எவையோ அவை எல்லாவற்றிற் காகவும் மக்கள் சந்நிதியானை நாடி வந்து நன்மைகள் பெற்றுக்கொண்டி ருக்கின்ற சந்நிதானம் என்ற தனித்துவ மான சிறப்பை சந்நிதி ஆலயம் கொண்டிருக்கிறது என்பதை எம்மால் நன்கு உணரமுடிகின்றது. இது உண்மையில் அங்கே கூடுகின்ற ஒவ் வொரு அடியார்களதும் உள்ளுணர்வு களுடன் சம்பந்தப்பட்ட வாழ்வியல் அனுபவங்களாகும். பொதுவாக ஒரு குழந்தை பிறந்தபின் ஆரம்பிக்கின்ற ஆரம்பச் சடங்குகள் தொடக்கம் ஒரு மனிதனது இறுதிக்காலத்தில் நிறை வேற்றப்படும் இறுதிச்சடங்குகள் வரை அனைத்து விடயங்களுக்காகவும் சந்நிதியானுடன் தொடர்புபடுகின்ற அடியார்கள் ஈழத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழ்ந்து கொண் டிருக்கின்றனர் என்ற யதார்த்தத்தை இவ்விடத்தில் கூறுவது பொருத்த மானதாகும்.

இவ்வாறு ஆத்மீகத்துடன் மட்டு மல்லாது வாழ்வியல் அனுபவங் களுடன் தொடர்புபட்டதும் அந்த வாழ்வியல் அனுபவங்களுக்கெல்லாம் தீர்வு காணுகின்ற சந்நிதி தானத்திலே எழுந்தருளியிருக்கின்ற சந்நிதி வேலவன் சந்நிதிச்சூழலிலே இருந்து புனிதமான பணிகளை மேற்கொண்டு வரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளையும் மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் ஆற்றுப்படுத்தி அவற்றை செயற்படுத்திக் கொண்டிருக்கும் அற்புத அனுபவங்களை தைமாத மலரினூடாக அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

வெள்ளியில் அன்னதானம் விஷேட தினங்களில் அன்னதானம் என்று ஆரம்பித்த சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்னதானப்பணி இன்று பல வகையாலும் விரிவடைந் துள்ளது. நித்திய அன்னதானம் என்றும், நிர்க்கதியாகி ஆலயத்தில் தஞ்சமடைந்த அன்பர்களுக்கு மூன்று நேரமும் உணவு வழங்குதல் என்றும், தலயாத்திரைக்காக களப்பயணம் மேற்கொண்டு வருவோர்க்கு காலம் பார்க்காது உணவு வழங்குதல் என்றும், ஆலயத்தில் திருமணத்தை மேற்கொள்வோருக்கு திருப்தியாக உணவளிக்கும் நிறுவனம் என்றும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்ன தானப்பணி பல்வேறு வகைப்பட்டவர் களுக்கும் திருப்தியளிக்கும் வகையில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாக பலராலும் பாராட்டும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அன்னதானம் என்ற அறப்பணி எவ்வாறு ஆழமாகவும் அகலமாகவும் விரிவடைந்து செல் கின்றதோ அதே போன்று சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் சமூகப் பணிகளும் விரிவடைந்து செல்வதை

யும் நாம் காணமுடிகின்றது. பொது வைத்தியப் பணி, மகப்பேற்று வைத்தியப்பணி, ஆரம்பப்பாடசாலை மழலைகளுக்கான நாளாந்த சத்துணவுத் திட்டம், அந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பளம் வழங்குதல், விதவைத் தாய்மாரைக்கொண்ட குடும்பங்கள் உட்பட ஆதரவற்றவர்களுக்கான மாதாந்த உதவிகள் வழங்குதல், பாடசாலைப் பிள்ளைகளுக்கான மாதாந்த உதவித்தொகை மற்றும் கற்றல் உபகரணம் வழங்குதல் என பல்வேறு சமூகநலத்தொண்டுகள் ஆச்சிரமத்தால் சிறப்பாகவும் திருப்தியாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் ஆத்மீகப் பணிகளாக 1993ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வாராந்த வெள்ளிநிகழ்வு, 1998ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் மாதாந்த ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு, சந்நிதியானின் உற்சவ காலம் மற்றும் கந்தஷஷ்டிக் காலங்களில் நடைபெறுகின்ற விஷேட ஆன்மீகச் சொற்பொழிவுகள், சமய சமூகப் பெரியோர்களை கௌரவிக்கும் வைகாசிப்பெருவிழா என அனைத்து ஆன்மீகப் பணிகளும் காத்திரமாக நடைபெற்று வருவதையும் காண முடிகின்றது.

அதே நேரம் காலத்தின் தேவையைக் கருதி மக்கள் துயர் துடைப்புச்சேவைகளையும் ஆச்சிரமம் மனித நேயத்துடன் மேற்கொண்டு வருகிறது. கடந்த 26-12-2004இல் நடைபெற்ற சுனாமி கடல் அலையின் அனர்த்தம் நடைபெற்ற மறுதினத்திலிருந்து அதாவது 27-12-2004 தொடக்கம் இன்றுவரை தொடர்ச்சியாக தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதனையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது. மேற்படி அனர்த்தத்தின் காரணமாக ஏதிலிகளாக்கப்பட்டு உடுப்பிட்டி அ.மி. கல்லூரி நலன்புரி முகாமில் இருந்தவர்களுக்காக ஆயிரம் உணவுப் பொதிகள், வல்வெட்டித்துறையில் சிரமதானப் பணிகளை மேற்கொள்பவர்களுக்காக நூற்றிஐம்பது உணவுப்பொதிகள் மற்றும் வடமராட்சி சுனாமி செயலக மத்திய அலுவலகத்திற்காக நூற்றிஐம்பது உணவுப் பொதிகள் என 27-12-2004இல் ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமத்தின் உணவுப்பொதிகள் வழங்கும் சேவை ஒரு மாதத்தை கடந்தநிலையிலும் இன்றும் தினமும் நானூறு உணவுப் பொதிகள் வழங்கும் செயற்திட்டமாக தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ஆச்சிரமம் அன்னதானப்பணியினைப் போன்றே சமய சமூகப் பணிகளையும் ஆழமாகவும் அகலமாகவும் விரிவுபடுத்தி செயற்படுத்தி வருகின்றது என்பதற்கு ஓர் உதாரணமாக முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் ஆச்சிரமம் அமைந்த கிராமத்திலுள்ள ஒருசில முன்பள்ளிகளுக்கு உதவ்வதற்காக ஆரம்பித்த இந்த நாளாந்த சத்துணவுத் திட்டம்

இன்று எழுபத்திமூன்று முன்பள்ளிகளுக்கு தினமும் சத்துணவு வழங்கும் திட்டமாக விரிவடைந்து மாதாந்தம் ஏறத்தாழ ஒருலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவை இதற்காக மட்டும் செலவிடும் நிலைக்கு இது விரிவடைந்துள்ளது. ஆரம்பப் பாடசாலைப்பிள்ளைகளின் கல்விக்கு உதவுகின்ற இத்திட்டம் அவர்களின் எதிர்கால கல்விக்கு அத்திவாரமாக அமையும் என்பதாலும் சத்துணவு என்பது மழலைகளுக்கு நேரடியாக பயன்படுகின்ற ஒரு செயல்த்திட்டம் என்பதாலும் இதனை ஆச்சிரமத்தின் சுவாமிகள் தனது நேரடிக்கண் காணிப்பில் செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இது ஆச்சிரமத்தின் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக இருந்த பொழுதிலும் என்ன நடக்கிறது, எப்படி நடக்கிறது என்று யாரும் உணர்ந்து கொள்ளமுடியாத நிலையில் சந்நிதியானின் திருவருளால் எல்லாம் நிறைவாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நிரந்தரமான மூலதன ஊற்றுக்கள் எதுவுமின்றி விஷேடமானதோ அல்லது மேலதிகமான ஆளனிவசதிகள் இன்றி வரையறுக் கப்பட்ட நேர நிலைமைகளுடன் சந்நிதியான் ஆச்சிரமமும் சைவ கலை பண்பட்டுப் பேரவையும் அளவிடமுடியாத அனைத்துச் செயற்பாடுகளையும் எவ்வாறு செவ்வனே நிறைவேற்றி வருகின்றதென்பது ஒரு விந்தையான விடயமே. ஆனால் சந்நிதியான் ஆச்சிரமம் என்ற அமுத சுரபியினூடாக இவை அனைத்தும் செவ்வனே நிறைவேறி வருகின்ற நிதர்சனமான செயற்பாடும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

நாம் இந்தப் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல மக்களின் ஆத்மீக ஈடேற்றத்திற்கு மட்டுமல்லாது மக்களின் வாழ்க்கைப் பயணத்தின் வாழ்வியல் அம்சங்களின் ஒவ்வொரு தேவைகளையும் நிறைவு செய்வதற்காக கலியுகக் கந்தன் எழுந்தருளி கருணைமழை பொழியும் ஆலயமே சந்நிதி ஆலயமாகும். அதேபோன்று இத்தகைய புனிதச் சூழலிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளையும் தனியே அன்னதானச் செயற்பாட்டிற்குள் மட்டும் மட்டுப் படுத்தாது மக்களின் உலகியல் வாழ்வின் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யும் ஒரு புனிதமான இடமாகச் செயற்படுத்தத் திருவுள்ளம் கொண்ட சந்நிதியானின் திருவிளையாடலின் ஓர் அங்கமாகவே சந்நிதியான் ஆச்சிரமத்தின் இன்றைய செயற்பாடுகளைக் கருதுகின்றோம்.

இதனால்தான் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப் படும் அன்னதானப்பணி உட்பட அனைத்து சமய, சமூகப்பணிகளும் எவ்வித தடைகளுமின்றி முழு நிறைவுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

அவன் தாள் பணிந்து அவனருள் பெறுவோமாக

ஓம் முருகா!

உ

# ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் அறப்பணிகள் பற்றிய விபரம்

மேற்படி ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்றாக முன்பள்ளிகளுக்காகிய சத்துணவும் ஆசிரியர்களுக்குரிய மாதாந்த வேதனங்களும் இதன் பிரகாரம் வடமராட்சியைச் சார்ந்த 73 முன்பள்ளிகளுக்குரிய சுமார் 1300 பிள்ளைகளுக்குரிய சத்துணவுக்காகவும் ஆசிரியர்களுக்குரிய வேதனமாகவும் மாதம் ஒன்றிற்கு ரூபா ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் (1,75,000) அளவில் செலவழிக்கப்படுகிறது.

இரண்டாவதாக வறுமைக் கோட்டிற்குட்பட்ட நூற்றிஐந்து (105) குடும்பங்களுக்கு மாதாந்த உதவி அடிப்படையில் பொருளாகவும், பணமாகவும் சுமார் எழுபத்தையாயிரம் (75000/=) ரூபா வகையில் செலவழிக்கப்படுகின்றது.

மூன்றாவதாக வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் முதலாவது தவணை கற்றல் உபகரணத்திற்காக சுமார் பதினையாயிரம் ரூபா வரையில் செலவழிக்கப்படுகின்றது.

இலவச வைத்திய சேவையின் அடிப்படையில் மாதாந்தம் எழுநூறு நோயாளர்கட்கு பொதுவைத்தியமும் மகப்பேற்று வைத்தியமும் வைத்தியர்களான M. யோகேஸ்வரதேவன், பொன். சின்னத்தம்பி, பிரபல மகப்பேற்று நிபுணர் G. பவானி அவர்களால் மேற்கொள்ளப்பட்டு சுமார் மாதாந்தம் இருபத்தையாயிரம் (25000/=) ரூபா பெறுமதியான மருந்து வகைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களைத் தெரிவு செய்து சுய தொழிலுக்கு ஊக்குவிக்கும் முகமாக தையல் இயந்திரம், பண உதவி அளித்தல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்.

ஆலயத்தை அண்டியுள்ள வயோதிபர்கட்கு வருடத்தில் நான்கு முறை உடுபுடவைகள் அளித்தல்.

இவ்வகையான பணிகளுக்காக மாதாந்தம் பெரும் நிதி தேவைப்படுகின்றது. ஆனால் இப்பணிகளுக்கமைவாக ஏதோ ஒரு வகையில் நிதி வந்த வண்ணம் இருக்கின்றமையால்தான் ஒரு ஒழுங்கு முறையில் அந்தந்த நேரத்தில் எம்மால் இப்பணிகளை நிறைவாகச் செய்யக்கூடியதாக உள்ளது. இதற்கெல்லாம் மூலகாரணம் சந்நிதியானின் பூரணமான அருள் சந்நிதியான் ஆச்சிரமத்தை ஆட்சி செய்கின்றது என்பதுதான் உண்மை.

தொடர்ச்சி...

உ

# 01-08-2004 இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| புஸ்பகாந்தராஜா கௌரி | பிரான்ஸ் 1மூடைஅரிசி | 1000. 00 |
| பொன்னையா கந்தசாமி | கனடா | 1000. 00 |
| Dr. V. குகமூர்த்தி கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஸ்ரீ நதியா நகை மாடம் ஸ்ரான்லி | வீதி, யாழ்ப்பாணம் | 4000. 00 |
| T. தியாகலிங்கம் S.V.M | யாழ்ப்பாணம் 1மூடைஅரிசி | |
| அ. ஆறுமுகம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| மாதினி விஜேந்திரன் | உடுவில் | 1000. 00 |
| S. பரமகுருநாதன் | உடுவில் | 1000. 00 |
| பூபாலசிங்கம் யுவன்ராஜ் (சுவிஸ்) | கல்வியங்காடு | 2000. 00 |
| க. பிரபாகரன் | ஏழாலை | 5000. 00 |
| திரு. திருமதி. கதிரவேல் அம்மன்வீதி | திருநெல்வேலி | 2500. 00 |
| திரு. மு. கந்தசாமி | இலண்டன் | 7000. 00 |
| திரு. சிவகுமார் குடும்பம் | திருநெல்வேலி வடக்கு | 2000. 00 |
| Dr. ஞானதீரன் | அச்சுவேலி | 500. 00 |
| பாலசுப்பிரமணியம் (கனடா) | மருத்துவசேவை மருந்து ஒரு தொகுதி | |
| V. நடராசாமூலம் தேவாலயவீதி | உரும்பராய் | |
| இ. அரவிந்தன் | லண்டன் | 25,000. 00 |
| நவரெட்ணம் முரளிகிருஸ்ணன் | கனடா | 2000. 00 |
| சுசிலா நகை மாடம் | பருத்தித்துறை | 2000. 00 |
| குணரெத்தினம் நாகேஸ்வரி | நவிண்டில் 1மூடைஅரிசி | 1000.00 |
| து. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 5000. 00 |
| வீரசிங்கம் ரவீந்திரன் | கோண்டாவில் | 1000. 00 |
| கலா உதயகுமார் வைமன் ரோட் | நல்லூர் | 500. 00 |
| ராகுலன் ரக்ஷனா | கொக்குவில் | 1மூடைஅரிசி |
| க. காசிராசாமூலம் த. விக்னேஸ்வரன் | குப்பிளான் | 1மூடைஅரிசி, மரக்கறி |
| சி. இரத்தினசபாபதி மணிக்கூட்டுவீதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஆ. மகேந்திரன் | ஆவரங்கால் | 1000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் சிவன் வீதி | ஆவரங்கால் | 2000. 00 |
| ஆறுமுகம் குடும்பம் வசந்தம் | இராசவீதி | 5000. 00 |
| திருமதி இராமச்சந்திரன் தவமணி | கரவெட்டி தெற்கு | 1000. 00 |
| நேசமலர் ரீச்சர், இன்பமலர் (கனடா) | தொண்டைமானாறு | 14,225. 00 |
| செல்வம் பற்றிக்கடை சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 3000. 00 |

உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்காமல் உழைப்புக்கு முதலிடம் கொடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வைர மாளிகை | கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 5மூடைஅரிசி |
| வைத்திலிங்கம் அன்சன்ஸ் | ஸ்ரான்லி வீதி | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி, அரைமூடைபருப்பு |
| அம்பிகாபதி பான்ஸ் கூட் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி |
| வெங்கடேஸ்வரா | கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 2மூடைஅரிசி |
| ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்ரோர்ஸ் | கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி |
| யோகு ரேடிங் | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 3மூடைஅரிசி |
| சிவப்பிரகாசம் ஸ்ரோர்ஸ் | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி |
| வேணி களஞ்சியம் | சத்திரச்சந்தி | யாழ்ப்பாணம் | 2மூடைஅரிசி |
| பெற்றா ஏசென்ஸ் | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 3மூடைஅரிசி |
| பெற்றா ஏசென்ஸ் ஊழியர் | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி |
| Dr. R. பாக்கியநாதன் பொன்னையா | | திருநெல்வேலி | 2500. 00 |
| சபா ரேடர்ஸ் | | அச்சுவேலி | 1மூடைஅரிசி |
| ம. சிறீகாந்தன் | | அச்சுவேலி வடக்கு | 2மூடைஅரிசி, 1புட்டி பயறு 2000.00 |
| P. பரிமளாதேவி (கைதடி) மூலம் முருகேசு சவாமிகளின் | | கனடா அன்பர்கள் | 50,000. 00 |
| P.T. பாலசந்திரன் | (அவுஸ்) | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| சி. கிருபாகரன் | (அச்சுவேலி) | லண்டன் | 5000. 00 |
| பிரவின் ஈசன் | | சங்கத்தானை | 1000. 00 |
| திரு சிவானந்தம் குடும்பம் | | சங்கத்தானை | 5000. 00 |
| K. லிங்கேஸ்வரன் | | வசாவிளான் | 1மூடைஅரிசி |
| K.M. குருநாதன் | (லண்டன்) | தொண்டைமானாறு | 8000. 00 |
| கிருஸ்ணர் ஜெயக்குமார் | | இடைக்காடு (கனடா) | 5000. 00 |
| சிவசக்தி மணிமண்டப நிர்வாகத்தினர் | | ஆவரங்கால் | 25,000. 00 |
| வில்வராஜா | | மலேசியா | 2000. 00 |
| கோ. வாகீசன் | | (பகிறேன்) | 1000. 00 |
| Dr. ரமேஸ் | | திருகோணமலை | 1000. 00 |
| சிவசுப்பிரமணியம் குலேந்திரன் | | லண்டன் | 5000. 00 |
| சாந்தகுமார் | | தொண்டைமானாறு | 15,000. 00 |
| க.கு. கந்தையாபிள்ளை | மருத்துவமனை வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை சம்பா |
| வேல்முருகன் களஞ்சியம் | K.K.Sவீதி | யாழ்ப்பாணம் | 1மூடைஅரிசி |
| க.கு. கந்தையாப்பிள்ளை மூலம் K.R | | | 1மூடைஅரிசி |
| க.கு. கந்தையாப்பிள்ளை மூலம் யாழ் S.K.M | | வவுனியா | 1மூடைஅரிசி |
| நந்தகுமார் செல்வமலர் | | கனடா (க.கு.க) | 1மூடைசம்பா |
| ராஜன் ஏஜென்சி | | கொழும்பு (க.கு.க) | 1மூடைசம்பா |

அறிஞன் பிறரைத் தாழ்மையாக நினைக்க மாட்டான்.

உ

# ஞானச்சுடர் வாசகருக்கான

## போட்டி - 2004

### பரிசுபெற்றோர் விபரம்

முதலாம் இடம் – செல்வி ச. கலையரசி
தேவாலயம் முன்பாக
பலாலி வீதி,
உரும்பராய்.

இரண்டாம் இடம் – திருமதி தேவராணி நவரெத்தினம்
யா/ கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலை
கட்டைவேலி,
கரவெட்டி.

மூன்றாம் இடம் – நவரெத்தினம் கேதீசகுமரன்
டச்சு வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

### *ஆறுதல் பரிசு*

சு. விதுஷகன் ஞானாசாரியார் வீதி, கரவெட்டி.
பாலகிருஸ்ணன் சிந்துஜன் முடக்கந்தோட்டம், அல்வாய்.
கனகசுந்தரம்பிள்ளை ரஜிவ்குமார் இராஜவீதி, அச்சுவேலி.
இ செல்வமதி ஞானாசாரியார் வீதி, கரவெட்டி.
திருமதி இ. செல்வரெத்தினம் கருணாலயம் திருநெல்வேலி.
ச. பசுபதீஸ்வரன் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி, கோப்பாய்.
செல்வி திவ்வியா சிவலிங்கம் 78,கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை.
திருமதி எம். கிருஸ்ணபிள்ளை "மாசில் அகம்" ஆவரங்கால்.
இ. சாந்தகுமார் "குமரபதி" அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
திருமதி பு. சுப்பிரமணியம் வாலையம்மன் கோவிலடி, திருநெல்வேலி.
சுகன்ஜா வாகீஸ்வரன் 26, வளாகவீதி, திருநெல்வேலி.
புஸ்பரேகா சுந்தரலிங்கம் நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
இராசரெட்ணம் ஜலதாலினி வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
ராஜாராம் சாயிமா 236/5 இராமையாச்செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.
மயூரா தர்மலிங்கம் பழைய தபாறகந்தோர் வீதி, சங்கானை.

வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்.

உ

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

04-02-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**அறிமுகவுரை-** க. சிவக்கொழுந்து J.P.

**சொற்பொழிவு:-** "வாழ்த்தி வணங்குவோம்"

**வழங்குபவர்:-** துணைவியூர் இ. கேசவன் (ஆசிரியர்)

---

11-02-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**விடயம்:-** பக்திப்பாடல்

**வழங்குபவர்:-** சிறுப்பிட்டியூர் வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ்

(பக்கவாத்திய சகிதம்)

---

18-02-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**அறிமுகவுரை:-** இரா. ஸ்ரீநடராசா (ஆசிரியர்)

**சொற்பொழிவு:-** பெரியபுராணம் (தொடர்)

**வழங்குபவர்:-** சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்

(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25-02-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## மாசி - 2005

**வெளியீட்டுரை:-** துரை. கணேசமூர்த்தி

(யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை ஆசிரியர் B.A)

**மதிப்புரை:-** ஐ. சண்முகலிங்கம் (ஆசிரியர்) (குப்பிளான் சண்முகம்)

(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

ஜனவரி
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

பெப்ரவரி
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

மார்ச்
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

ஏப்ரல்
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்,
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

மே
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

ஜூன்
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

ஜூலை
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

ஆகஸ்ட்
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

செப்ரெம்பர்
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

ஒக்ரோபர்
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

நவம்பர்
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

டிசம்பர்
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005